# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



சித்திரை - 2020

# காற்றுவெளி

## கலை இலக்கிய இதழ்

*சித்திரை - 2020*

*ஆசிரியர் : சோபா*

*வடிவமைப்பு : நெகிழன், 7904748374*

*படைப்புகள் அனுப்ப :*



R.Mahendran,

34 Redriffe Road, Plaistow, London, e13 0JX, UK

*மின்னஞ்சல் :*

Mullaiamuthan16@gmail.com



*நன்றி : இணையம்*



*படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.*


## வணக்கம்,

சித்திரை மாத இதழுடன் சந்திக்கிறோம். மக்களின் வாழ்வியல் சூழலின் மாற்றத்திற் கூடாகவும் வாசிக்கின்ற வாசகர்களுக்கும் குறைவடைந்துவிடவில்லை. இணையம்,அச்சு ஊடகம் என தங்களின் வாசகத் தளத்தை விரிவுபடுத்தியே வருவது கண்கூடு.

புதிய தேடல்களுக்கிடையேயும் புதிய,புதிய சிற்றிதழ்களின் வருகையும் அதிகமாகவே வருகின்றன.அண்மையில் நமது பார்வைக்குக் கிட்டிய சிறுகதை மஞ்சரி,புதிய பெண்ணியம் இதழ்கள் போலவே நிறைய வந்தும்,நம் கைகளுக்குக் கிடைக்காததால் அவை பற்றிய பார்வையைப் பெற வாய்ப்பில்லாமல் இருக்கிறது.

இவ்வாண்டு காற்றுவெளி கலை இலக்கிய விழாவை ஏற்பாடு செய்ய நினைத்திருந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரன சூழ்நிலை தாமதப்படுத்தியுள்ளது.

நிலைமை சீராகும் பட்சத்தில் விழா பற்றிய தகவல் தருவோம்.

நூல் அறிமுகத்திற்கு ஒரு பிரதி அனுப்புங்கள்.

காற்றுவெளியின் படைப்பாளர்களுக்கு நன்றி. தொடருங்கள்.

தொடர்வோம்..

நம்பிக்கையுடன்,

**சோபா**



# கவிஞர் நா.விச்வநாதன் அவர்களுடன் ஒரு நேர்காணல்

**நேர்காணல் கண்டவர் : இல.பிரகாசம்**

"அசல் விமர்சனம் என்பது பூரணமாகத்தான் இருக்க முடியும்" என்ற பார்வையில் தமிழில் இலக்கியத்தின் பல்வேறு தளங்களலில் தனது இருப்பை, இயக்கத்தைத் தொடர்ந்து இருத்திக் கொள்வதென்பது சாதாரணமான ஒன்று அல்ல. தன்னுடைய இருப்பை படைப்பின் வழியேதான் ஒரு படைப்பாளி காட்டிக் கொண்டிருக்க முடியும். தமிழில் தஞ்சைப் பகுதியில் வளமான இலக்கியத்தன் நீரோட்டத்தில் எழுத வந்தவர். கவிஞரும் சிறுகதையாசிரியருமான நா.விச்வநாதன். சுதந்திரம், வெட்கம் தொலைத்தது, முள்ளில் அமரும் பனித்துளி, அணில் முற்றம், யானையின் நிழல் உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளும், பாட்டிகளின் சிநேகிதன்,

காலமும் எழுபது குதிரைகளும், நிரம்பித் ததும்பும் மௌனம், சன்னலோர இருக்கை, திசையெல்லாம் பெருவழி உள்ளிட் சிறுகதைத் தொகுப்புகளும், புனைவு வெளி கட்டுரைத் தொகுப்பும் மிக முக்கியமாக கவனிக்கத் தக்கவை. நிரம்பித் ததும்பும் மௌனம் சிறுகதைத் தொகுப்பிற்காக தமிழக அரசின் விருதையும் பெற்றவர். தற்போது தபால் துறையில் அதிகாரியாக பணியாற்றி ஓய்வு பெற்று தஞ்சாவூர் அருகில் சொந்த ஊரான அரசூரில் இருந்தபடி பேசும் புதிய சக்தி இதழின் ஆசிரியராகவும் இருக்கிறார். தஞ்சை மராட்டியர் கால பின்னனியில் "லட்சுமி ராஜபுரம் அரண்மனை" நாவலையம் எழுதிக் கொண்டிருக்கிறார்.

## கேள்விகளின் மூலமாகவும், உரையாடல்வழி மூலமாகவும் கண்ட நேர்காணல்:

**இல. :** தமிழில் மூத்த கவிஞரான நீங்கள் புதுக்கவிதையின் காலகட்டத்தில் எழுதவந்தவர் நீங்கள். அப்போதைய காலகட்டத்திற்கும் தற்போதைய காலகட்டத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி...

**நா.வி :** முதலில் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். புதுக்கவிதை, பழையகவிதை என்றெல்லாம் வகைகள் இல்லை. கவிதை என்பது ஒன்றுதான். நவீன கவிதை என்ற சொல்லாடல் சிறந்ததன்று. அப்போதான காலத்தில் கவிதையின் பாடுபொருள் மிகக் குறுகிய பரப்பிலேயே கிடைத்தது. அதற்குள் எழுதினார்கள். தமிழ் மரபு சார்ந்த விஷயங்களை எடுத்துக் கொண்டார்கள். தலைவன், தலைவி, பருவகாலங்கள் முதலான பாடுபொருள்கள், கற்பிக்கப்பட்ட அறம் என்ற ஒற்றைச் சொல்லுக்கு அடிபணிந்து எழுதினார்கள். பின்னால், அறிவியல் கதவுகளைத் திறந்துவிட்ட பிறகு அறம் குறித்த மாற்றுச் சிந்தனை எழுந்த போதும், உலக இலக்கியங்கள் இங்கு தாராளமாக அறிமுகப்படுத்தப்பட்ட போதும் தமிழ் எழுத்து மாற்றம் பெற்றது. புதுமைப்பித்தன் போன்ற கலகக்காரர்கள் துணிந்து எழுதினார்கள். இது ஒரு மாற்றமே. கல்கி வகை எழுத்து என்பது மாறி புதுமைப்பித்தன் எழுத்துவகை பிரபலங்கண்டது. இது விரும்பத்தக்கது. இதற்கு நவீன எழுத்து என்று ஒரு வசதிக்காக பெயர் சூட்டினோம்.

**இல. :** தொழில்நுட்பம் வளர்ந்து வரும் இன்றைய காலகட்டத்தில் சிற்றிதழ்கள் அச்சு இதழாக வெளிவருவதில் சிக்கல்கள் அதிகமாக இருக்கின்றன. அச்சு இதழின் ஆசிரியராக இருக்கும் நீங்கள், ஒரு இதழாசிரியராக எதிர்கொள்கின்ற சிக்கல்கள் என்னென்ன? இணைய இதழ்கள் வந்த பின், அச்சு இதழ்களில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து உங்களுடைய கருத்து என்ன?

**நா.வி :** இணைய இலக்கிய இதழ்கள் தவிர்க்க முடியாதவை. ஓலைச்சுவடிலிருந்து அச்சுக்கு மாறியபோது நேர்ந்த லேசான சிக்கல்கள் போலத்தான் இதிலும் எழுந்தன. இன்னும் கிராமப்புறங்களில் பரவவில்லை. இன்று கிராமப்புற எழுத்து என்பதே இல்லை. எல்லாம் நகரம்தான். இலக்கிய கர்த்தாக்கள் கிராமப்புறத்திலிருந்து நகரத்துக்கு வந்து கிராமங்களைப் பற்றி எழுதினார்கள். அதில் கிராமங்கள் இல்லை. இணையம், பொருளாதாரம் தொழில்நுட்பம் சார்ந்ததாக இருக்கிறது.
ஒரு பேனா கொஞ்சம் ஏ4 பேப்பர்கள் போதுமானதாக இருந்தது. என்போன்ற நகரம் சாராதவர்களுக்கு பேனாவைப் பாவிக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை இழப்பது வருத்தமே. விதவிதமான கையெழுத்து வடிவங்கள், அடித்ததல் திருத்தல்கள் அழகானவை. ரசிக்கத்தக்கவை. ஆனாலும் இவற்றைத் தாண்டவேண்டும்.
அச்சு இதழ் என்று நீங்கள் குறிப்பிடுவது இலக்கியச் சிற்றிதழ்கள் எனக் கருதுகிறேன். ஒரு பத்துப் பதினைந்து பேர்கள் ஆங்காங்கே குழுவாக இயங்கி அவர்களுக்கென ஒரு பத்திரிகை என்று வந்துவிட்டது. இதில் விரோதம், போட்டி, ஒருவித சோகை அரசியல் போன்ற வேண்டாத விஷயங்கள் உருவாகி இலக்கியம் பின்னுக்குத் தள்ளப்பட்டது. இது ஒரு சண்டித்தனம் என்று கூறுவதில் எனக்குத் தயக்கமில்லை. பொது எழுத்து என்ற ஒன்று இல்லாமல் போனது. அன்று புதுமைப்பித்தனுக்கும், கா.நா.சுப்ரமணியத்திற்கும், கு.அழகிரிசாமிக்கும், மௌனிக்கும், எம்.வி.விக்கும், தி.ஜானகிராமனுக்கும் கருத்து வேறுபாடுகள் கடுமையான விமரிசனங்கள் இருந்தன. ஆனால், எழுத்து செழுமையாக இருந்தது. வெறுப்பு எழுத்துக்குள் வரவில்லை.

**இல. :** இளம் தலைமுறையினர் பலர் எழுத வந்திருக்கும் இக்காலகட்டத்தில் பரவலாக வந்துகொண்டிருக்கும் குற்றச்சாட்டு, இளைஞர்களிடத்தில் வாசிப்புப் பழக்கம் குறைந்து வருகிறது என்பது. இருப்பினும், பலர்

எழுத வருவதை குறித்து...

**நா.வி :** வாசிப்புப் பழக்கம் குறைந்துவிட்டது. எழுதுவதைப் பகுதிநேரமாகக் கொள்வதால் வந்தவினை. இது தவிர்க்க முடியாதது. இன்று வங்கி ஊழியர்களும், அரசு ஊழியர்களும், அஞ்சலக எழுத்தர்களும் பொறியாளர்களும்தான் எழுத்தாளர்களாக இருக்கின்றனர். ஜீவனம் முக்கியமானதாக இருக்கின்றது. முழுநேர எழுத்தாளராக இருந்தால் எல்லாவற்றையும் இழந்துவிடுவர்.
எழுத்தாளர்களுக்கு கடைசி வரிசையில்தான் இடம். மிகக் குறைந்த வாழ்வனுபவங்களைக் கொண்டு அற்புதமாக எழுதினார்கள். நல்ல எழுத்து மோசமான எழுத்து என்ற இரண்டு வகைதான் உள்ளன. நல்ல எழுத்து நிற்கும் என்பது நம்பிக்கை.

**இல. :** *2000ம் ஆண்டிற்கு பிறகு தமிழ் இலக்கியத்தில் கோட்பாட்டுத் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. கோட்பாட்டு உத்திமுறை தமிழ் இலக்கியத்திற்கு ஏற்றதா?*

**நா.வி :** கோட்பாட்டுத் தாக்கம் இருப்பது இயல்பானதுதான். கோட்பாடுகளை அப்படியே எழுதுவது கட்டுரை மாதிரிதான். இலக்கியம் உயிர்ப்போடும் களிப்போடும் இருப்பதற்கு சில நாகாசு வேலைகளைச் சிரத்தையாகச் செய்யவேண்டும். ஓர் அசைவு வேண்டும். அசைவுதான் உயிர்ப்போடு இருப்பதன் அடையாளம். இருத்தலில் எதுவுமே ஆரம்பநிலையில் முடிந்து விடுவதில்லை. கோட்பாட்டு விஷயங்களைத் தூக்கலாகப் பாவிப்பது மட்டுமே போதாது. பெரிய மாற்றமோ புரட்சியோ வந்துவிடப் போவதில்லை. தமிழ் எழுத்தாளர்களைப் பொறுத்தவரை நான்கு சுவர்களுக்குள் பத்திரமாக இருந்து கொண்டு புரட்சி பற்றி விவாதிப்பார்கள். முழக்கமிடுவார்கள். அடுத்த நொடியே ஒரு மாற்றம் வந்துவிட்டாற் போல் ஒரு பிரமையை உருவாக்குவர். கூட்டம் முடித்து ஆளுக்கொரு ஸ்ட்ராங் டீ சாப்பிட்டு விட்டு வீடு சேர்வர். ஐம்பது ஆண்டுகளாக தமிழ் இலக்கிய உலகில் இவையே நடக்கின்றன. சக எழுத்தாளர்களுக்கு இன்னல் ஏற்பட்ட போது பெரிய கிளர்ச்சி ஏற்பட்டுவிடவில்லை. பெருமாள்முருகனுக்கோ, புலியூர்முருகேசனுக்கோ மெல்லிய முணுமுணுப்புதன்- அதிகார வர்க்கத்தின் மேலான அச்சம். பரிசுகள், விருதுகள் பற்றிய எதிர்பார்ப்பு, முன்னெச்சரிக்கைத்தனம் எதையும் புதிதாக நிர்மானிக்க விரும்புவதில்லை. செம்மையானவற்றைத்

தகர்த்துவிட பெருவிருப்பம் வருந்தத்தக்கது. அச்சம் சூழ் உலக இது.

**இல. :** தமிழில் விமர்சனம் என்பது ஏறக்குறைய இல்லாமல் போய்விட்டதாகவே பார்க்கப்படுகிறது. விமர்சனங்கள் என எழுதப்படுபவைகள் பாராட்டுகளாகவே இருக்கின்றனவே?...

**நா.வி :** விமரிசனம் இருக்கிறது. சார்புநிலை விமரிசனம். சாதி சார்ந்த விமரிசனம். கா.நா.சு. போல், வெங்கட் சாமிநாதன் போல் அவர்கள் சற்று கடுமையாக இருந்தாலும் நியாயமாக இருந்தார்கள். விமரிசனம் இன்று பரிந்துரையாகவோ பாராட்டுகளாகவோதான் இருக்கிறது. தன் ஆளின் எழுத்து என்பதால் தூக்கிவிட வேண்டும் என்ற அவசரம் தெரிகிறது. இதில் கா.நா.சு கோட்பாடு சரியாகத் தோன்றுகிறது. கா.நா.சுவைத் தவிர்த்துவிட்டு இலக்கியம் பேசமுடியாது. எனக்கு எனக்கு எனக்கு என்பதில்தான் இலக்கிய சிருஷ்டியும் இலக்கிய விமரிசனமும் அடங்கி இருக்கிறது. தத்துவ தரிசனம் ஆணவத்தைப் போக்க அவசியமாகிறது.

ஆணவம்கூட தனித்தன்மையை தக்கவைக்கிறது. அதில்லாவிட்டால் மெஷின்கள் உற்பத்தி செய்யும் இலக்கியம் தான் இருக்கும். மனிதர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் மாறுபட்டுச் செய்யும் இலக்கியம் சரியன்று என்பர். இது பலருக்குப் பிடிக்கவில்லை.

இலக்கியத்தையும் அதன் போக்கையும் துல்லியமாகக் கணித்தவர் கா.நா.சு. கில்காமேஷ்-ஆதிகாவியத்திலிருந்து இன்று ப்ரூஸ்ட் ஜாய்ஸ் வரை தென் அமெரிக்காவிலிருந்து சீனா, ஜப்பான் எனப் பரந்துகிடக்கும் இலக்கியத்தால் மனிதன் என்ற சரடு ஊடுருவிக் கிடக்கின்றது என்பது சரியாக இருக்கிறது. (கா.நா.சு) இன்று இலக்கியத்தின் மூலம் தமிழில் சமர் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

**இல. :** கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ் இலக்கியச் சூழலில் பலரும் இலக்கிய கூட்டங்களை நடத்தி வருகின்றனர். அவற்றில் நீங்களும் பங்கேற்று வருகிறீர்கள். அதன் அனுபவங்கள் பற்றி...

**நா.வி :** இலக்கிய கூட்டங்கள் நிறைய நடக்கின்றன. எல்லாக் கூட்டங்களிலும் பேச்சாளராகவோ பார்வையாளராகவோ கலந்து கொள்கிறேன். ஒரு பெரிய பத்தியிலிருந்து இரண்டொரு செழுமையான வார்த்தைகளை எடுத்துக்கொள்வது மாதிரிதான்.

பொதுவாக நண்பர்களைச் சந்திக்கும் இடமாகவே இருக்கிறது. சிறிய நகரங்களில் கூட ஒரே நாளில் ஒரே நேரத்தில் மூன்று கூட்டங்கள் நடக்கின்றன. இதன் பொருள் என்ன?

**இல. :** கவிஞர்.சிற்பி பாலசுப்ரமணியம் சாகித்ய அகாதமியின் தேர்வுக் குழுவிற்கு வந்த பிறகு தமிழ்ப் படைப்புகள் விருதுகளைப் பெறுகின்றன. கடந்தாண்டு சூழ் நாவலுக்கும், இந்தாண்டு மொழிபெயர்ப்பு நூலுக்கும் கிடைத்திருக்கின்றன.

இன்னும் பலர் உரிய அங்கீகாரம் கிடைக்காமல் இருப்பதாக குரல்கள் எழுகின்றனவே?

**நா.வி :** கவிஞர் சிற்பி தேர்வுக்குழுவிற்கு வந்தபிறகு நல்லன நடக்கின்றன. ஆனால் முடிவெடுக்கும் இடம் வலுவான அதிகார பீடங்களின் கைகளில் இருக்கிறது என்பது அவதானிப்பு.

**இல. :** தமிழ் இலக்கியச் சூழலில் குழுமனப்பான்மை இருந்ததை கண்டவர் நீங்கள். தற்போதும் இலக்கியச் சூழலில் வலதுசாரி, இடதுசாரி என செயல்பட்டு வருகின்றனர். அதன் பாதிப்பு அல்லது சாதகம் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்தும். அல்லது ஏற்படுத்தியுள்ளதாக நினைக்கிறீர்கள்?.

**நா.வி :** தமிழ் இலக்கியச் சூழலில் வலதுசாரி, இடது சாரி என்பது இருந்தது. தம்தம் வழியில் தம்தம் அரசியல் கட்சிகளின் சித்தாந்தத்தைத் திணிப்பதில் முனைப்பாக இருந்ததுதான் நடந்தது. இன்னும் இதே நிலைதான். அரசியல் காவிகளின் வாலாக இலக்கிய அமைப்புகள் இருத்தலாகாது.

**இல. :** தற்போதைய இந்திய அரசியல் சூழலில் எழுத்தாளர்கள் தாக்கப்பட்டும், கொலைசெய்யப்பட்டும் வருகின்றனர்.

தமிழ் எழுத்தாளர்கள் சிலரும் தாக்குதலுக்குள்ளாகின்றனர். முற்போக்கு அமைப்புகள் அவர்களுக்கு ஆதரவாக எழுத்திலும், போராட்டத்திலும் கண்டனங்களைத் தெரிவிக்கின்றனர். இத்தகைய பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு?

**நா.வி :** உண்மைபேசும் எழுத்து தாக்கப்படுவது நடக்கிறது. அதிகாரமிக்கவர்கள் ஏவிவிடுகிறார்கள். அதிகாரம் வலுவானது. அறத்தின் குரல் பலகீனமானது.

தமிழகத்தில் முகநூலில் எல்லாப் புரட்சிகளையும் எதிர்ப்பையும் செய்து முடித்து வெற்று முழக்கமிடுவது நடக்கிறது.

**இல. :** தஞ்சையைச் சேர்ந்த இலக்கியவாதிகள் எல்லோரிடமும் நட்பு கொண்டவர் நீங்கள். அவர்களில் உங்களுடைய ஆசானாக குறிப்பிடுவது தஞ்சை ப்ரகாஷ் அவர்களை. அவருடன் இருந்த நட்பு குறித்து...

**நா.வி :** தஞ்சை ப்ரகாஷ் பல எழுத்தாளர்களை உருவாக்கினார் என்பதை விட நல்ல எழுத்துகளை இனம் காட்டினார் என்பதே முக்கியமானது. "சோழிகளை விற்று நகரத்தை வாங்கினோம்", "நீலகண்டப் பறவையைத் தேடி" முதலான வங்க மொழி பெயர்ப்புகளை எங்களிடம் சேர்த்தார். நல்ல வாசகனான உருவானோம். தன்னிடமிருந்த எல்லா ஞானத்தையும் பிறருக்கு வழங்கிவிட வேண்டும் என்ற பேரவா அவருக்கு இருந்தது. அவர் இருக்கும் போது எங்களைத் தவிர யாரும் கொண்டாடவில்லை. இன்று கொண்டாடப்படுகிறார். அவருடைய நூல்களுக்கு நல்ல சந்தை இருக்கிறது. மகிழ்ச்சிதான்.

**இல. :** இசைப்பிரியரான நீங்கள் கர்நாடக இசை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்கிறீர்கள். கர்நாடக இசைக் கலைஞர்கள் குறித்தும் தொடர்ந்து எழுதி வருகிறீர்கள். தற்போது கர்நாடக இசை கச்சேரி செய்பவர்களில் குறிப்பிடத் தக்கவராக யாரை குறிப்பிடுவீர்கள்? ஏன்?

**நா.வி :** எனக்கு இசை பிரமாதமாகத் தெரியாது. இசைச் செவிகள் உள்ளவன். நல்ல இசையை இனங்கண்டு ரசிப்பவன். எம்.எஸ்.சுப்புலட்சுமி தாண்டி நான் வெளியே வரச்சிரமப்படுகிறேன். தன் அறிவுக்கு அப்பாலும் ஞானம் இருக்கிறது என்ற போக்கு இலக்கிய உலகில் இருப்பதைப் போலவே இசையுலகிலும் இருக்கிறது. எம்.எஸ் மாதிரி ஆத்மாவிலிருந்து இசைப்பது யாருக்கும் வாய்க்கவில்லை. எனக்கு நம்பிக்கை தரக்கூடியவராக சஞ்சை சுப்பரமணியம் வருகிறார்.

**இல. :** மராத்தியர் கால தஞ்சையை மையமாகக் கொண்டு எழுதிவரும் "லட்சுமி ராஜபுரம் அரண்மனை" நாவல் குறித்து...

**நா.வி :** மராத்தியர் காலம் சுவாரசியமானது. தஞ்சை மராத்தியர் கால ஆட்சி

சூழ்ச்சிகள் நிறைந்தது. இரண்டாம் சரபோஜி எல்லோராலும் போற்றப்படுகிறார். நல்ல ஆட்சியாளன் இல்லை. மராத்தி, இந்தி, தெலுங்கு, கன்னடம், குஜராத்தி என்ற ஒரு கலைப்பிரதேசமாக தஞ்சை இன்று இருப்பதற்கு காரணம் மராத்தியரே. புகழ்பெற்ற சரபோஜியின் சரஸ்வதி மகால் உண்மையில் நாயக்கர்கள் உருவாக்கியது. சோழ, நாயக்கர் சாதனைகள் மராத்தியர் சாதனைகளாகப் பதிவாகியிருக்கின்றன. "லட்சுமி ராஜபுரம் அரண்மனை" நாவலில் இவற்றைச் சொல்ல இருக்கிறேன். என் வழக்கமான சோம்பேறித்தனத்தால் இன்னும் முடிக்காமல் இருக்கிறேன்.

**இல. :** வட்டார இலக்கியங்கள் நாவல்களாக இன்று நிறைய எழுதப்படுகின்றன. தஞ்சை வட்டார மொழியில் இலக்கியம் படைப்பது குறைந்து வருகிறதே?. வட்டார இலக்கியம் என்றால் கரிசல்மண் சார்ந்த கதைகள் முன்னிறுத்தப்படுகின்றனவே?

**நா.வி :** வட்டார இலக்கியப் பதிவுகள் வேண்டும்தான். தஞ்சை வட்டார மொழி என்பது பிராமணர்களின் மொழியாகப் போனதுக்கு கு.ப.ரா, தி.ஜா, ந.பிச்சமூர்த்தி முதலானவர்கள் இதை முன்னெடுத்தார்கள். அவர்களுக்குப் பின்னரான இலக்கிய இயக்கம் வேறு தளத்திற்கு வந்துவிட்டது. தஞ்சாவூர் பகுதி இப்போது கலப்புப் பகுதிதான். இதற்கு இப்போது ஒரு பொது மொழி கிடைத்திருக்க வேண்டும். அவ்வாறு அல்லாமல் போனது. தஞ்சைப் பகுதியில் செறிவான இலக்கியம் இல்லை என்பதுதான் சரியானது. பிற வட்டாரங்களிலிருந்து வந்து தங்கிவிட்டவர்கள் தங்கள் வட்டார இலக்கியத்தை எழுதுகிறார்கள். இது இயற்கையானதாக இல்லை.

இந்த மாறுதல் ஏற்கத்தக்கதே. இடம் பெயர்தல் -மணவினை, வேலை, வணிகம் சாலைகளின் வசதி என ஏற்பட்ட போது வட்டார வழக்கு இல்லாது போகக்கூடும். தஞ்சாவூர் பிராமணர்கள் தஞ்சாவூரை விட்டுப் போனபிறகு அக்ரகாரங்கள் காணாமல் போனபோது இது நேர்ந்தது.

பிராமணர்கள் என்றால் பிராமண எழுத்தாளர்கள். இதில் வசைக்கோ விமரிசனத்திற்கோ இடமில்லை. தஞ்சாவூரில் அதன் பூர்வ குடிகள் சிறுபான்மையே. அப்புறம் தஞ்சாவூர் நிர்வாக ரீதியில் பிரிந்து விட்டது. தஞ்சை எழுத்து என எதை அடையாளப்படுத்துவது?

கரிசலக்கு இந்தச் சிக்கல் இல்லை. இலக்கியம் சார் இந்த சண்டை

சச்சரவுகள் அநேகமாக அங்கில்லை. பூமிப் பாசம் மிகையாக இருக்கிறது.

**இல. :** தொடர்ந்து தமிழ்ப் பதிப்பகங்கள் நிறைய தோன்றுகின்றன. அவற்றை பெரும்பாலும் எழுத்தாளர்களே தொடங்கியிருக்கின்றனர். அது பதிப்புச் சூழலில் ஆரோக்கியமானதா? அல்லது பாதகமானதா?

**நா.வி :** நல்ல சூழல்தான். பதிப்பகம் இன்றி என்ன செய்ய முடியும். பதிப்பகத்தார் அதிகாரமிக்கவர்களாக இருக்கிறார்கள். டிஸ்கவரி புக்பேலஸ், அன்னை இராஜேஸ்வரி பதிப்பகம் முதலியன நியாயமாகச் செயல்படுகிறது என எனக்குத் தோன்றுகிறது. இவற்றின் நிர்வாகத்தார்களே எழுத்தாளர்களாக இருப்பதால் சரியாக இருக்கிறது என்று தோன்றுகிறது. எல்லாம் வாசகனின் கைகளில் இருக்கிறது.

**இல. :** நவீன தொழில்நுட்பம் எதிர்காலத்தில் தமிழ் இலக்கியத்தின் போக்கை எப்படி மாற்றியமைக்கும் என்று எண்ணுகிறீர்கள்?. அல்லது விரும்புகிறீர்கள்?

**நா.வி :** நவீனத் தொழில்நுட்பம் மாற்றியமைக்கும். இலக்கியத்தின் போக்கு சீராக இருக்கும். நல்ல எழுத்தாளர்களைத் தமிழர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எப்படி என்பதுதான் பெரிய பிரச்சனை. இது குறித்து க.நா.சு கவலைப்பட்டிருக்கிறார்.

**இல. :** சமீபத்தில் நீங்கள் வாசித்த நூல்கள் குறித்து...

**நா.வி :** தி.ஜானகிராமனின் "மோகமுள்", மௌனியின் கதைகள், பண்டைய இந்திய வரலாறு, கலைச்செல்வியின் நாவல்கள், கரிச்சான் குஞ்சுவின் பசித்த மானிடம், எம்.வி.வியின் "காதுகள்", தஞ்சை ப்ரகாஷ் "கரமுண்டர் வூடு", சி.எம்.முத்துவின் "நெஞ்சின் நடுவே" எல்லாமே மறுவாசிப்புதான். ஒவ்வொரு முறையும் புதிதாகவே இருக்கிறது.
கவிதைகளைப் பொருத்தவரை மௌனன் யாத்ரீகா, ஸ்டாலின் சரவணன் கவிதைத் தொகுதிகளை வாசிக்கிறேன். தமிழின் காத்திரமான படைப்புகள்- விமரிசனத்தால் பயனுள்ளது என்று சொல்லக் கூடியது. நான் படித்து அனுபவித்தேன் நீங்களும் படித்து அனுபவியுங்கள் என்ற சிபாரிசு வேண்டும்தான். இது வாசகனின் நியாயமும் கூட.
அசல் விமரிசனம் என்பது பூரணமாகத்தான் இருக்க முடியும். ●

# செல்வமொழி கவிதை

உற்ற துணை தேடி உற்று
நோக்கிக் கொண்டிருக்கும்
தருணத்தில் தனித்துவமாய்
தாம் தோன்ற மனதில் ஓடிக்
கொண்டிருந்த பூகம்பச் சுருக்கம்
சற்று தளர்ந்து நகர்ந்தது
பெண் பார்த்த தேநீர் உரையில்!
ஒவ்வொரு மலர்தலிலும்
கானல்நீராய் அருவமாய்
மன்னவன் உதித்த திசை
தேடிச் சுவைத்த சுகம் சூழ,
பூப்படைந்த நாள் முதல்
தேடித் தேடித் தேர்ந்தெடுத்த
தேனாய் என்னவருக்காக
சேகரித்த காதல் நெஞ்சில்
நிரம்பிக் கொட்டுது!
கவிதையாய் கோர்த்து மாலையாய்
சூட முனைகையில்
வார்த்தைகளும் முட்டுது.
ஏனோ? உவகையின் நாணமோ??
மழலையின் சிரிப்பில் மனம்
கொண்டாடும் இயல்பை என்னவர்
என்னுள் நுழைந்ததும் கிடைக்கப்
பெற்றதாய் பேரானந்தம் உணர
என்னவர் எனக்கானவர்
எனக்காய்ப் பிறந்தவர் என்
சுகதுக்கம் பகிர்ந்து தோள் தொட்டு
கைகோர்த்து நடக்கும் மணவாளரின்
காதலுக்காக காத்துக் கொண்டிருக்கும்
கள்வனின் காதலியாய் நான்!
செல்வமொழி



## துளிப்பாக்கள்

## சா.கா.பாரதி ராஜா

நீர் மட்டுமல்ல
ஒரு குட்டையே நகர்கிறது
வானில் மேகங்கள்

●

சொட்டு சொட்டாக
மழைநீர் விழ
கொதிக்கிறது குளம்

●

நிலவைப் பார்த்து
கவிதை எழுதுகிறேன்
என்மீது முத்தப் பொழிவு

●

புதுமனை புகுவிழா
தொடர் விளக்கிட்டு கொண்டாட்டம்
மரத்தில் மின்மினிகள்

●

வெற்றுப் பையுடன்
திரும்பும் இசைக் கலைஞர்
வீட்டில் கச்சேரி

●

புயலில் மரம்
சாய்ந்ததும் பார்க்கிறது
நிமிர்ந்து நிற்கும் புல்

இறந்த தாத்தா
சோகத்தில் தலைசாய்வு
கைத்தடி

●

நகரும் வாகனம்
அழைத்துச் செல்கிறது
என்னையும் எனது நிழலையும்

●

தண்டவாளத்தில்
தடம் புரண்டு கடக்கிறது
ஓடும் தொடர்வண்டியின் நிழல்


●

குகையிலிருந்து தொடர் வண்டி
நெருங்க நெருங்க
மலையையே மறைக்கிறது

●

அஞ்சறைப் பெட்டிக்குள்
சேமிப்பாய் நிறைந்திருக்கும்
அம்மாவின் நினைவுகள்

●




# சந்திரா மனோகரன் கவிதை

## புகைப்படம்

புகைப்படத்தை அ சைத்துப் பார்க்கிறது
புயலின் பெருமம்
தரையில் அட்டணங்கால் போட்டு
அமர்ந்திருக்கிறது அந்தப் பெருங்காற்று
வன்மத்தின் இடிபாடுகளில்
முடங்கியதொரு புராதனவீடு
இளமை கடந்து விருத்தாப்பியத்தின் அணிமை
இருவரைத் தேடும் பணியில்
விரல்கள் மட்டும் துருத்திக்கொண்டு
மண்ணைக் கீறியெழும் தளிர்போல
சில்லிட்ட கால்விரல்களை
தூசும் தும்பும் போர்த்தியிருக்க ..
சிதிலங்குதறும் இயந்திரங்களுக்கு
மெல்ல அனுங்கும் பூனையின்
மென்மையறியும் இயல்பில்லை
விடாப்பிடிப்புயலின் அழலலில்
நசுக்கும் காற்றின் வேகத்தில்
நகர்ந்து கிடக்கும்
அந்தப் புகைப்படத்தில்
மணக்கோலத்தில்
அறிதுயில்கொள்ளும் அந்த இருவர்.

ந.கிருஷ்ணசிங்கம்.



# விடுதலைக்குப்பின் நடந்த கொலை

வெலிக்கடைச் சிறைச்சாலை ஆங்கிலேயரின் காலனித்துவ காலத்தில் கட்டப்பட்டது. இது கொழும்பு நகரமையத்தில் மிகப்பெரும் நிலப்பரப்பை உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றது. இந்தச்சிறைச்சாலையின் முன்பகுதி தண்டனைக் கைதிகளுக்காகவும், பின்பகுதி தடுப்புக்காவற் கைதிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொய்ச்சாட்சிசொன்ன குற்றத்துக்காக முத்துத்தம்பி என்ற இருபதுவயது வாலிபன் பத்துவருடக் கடும்ஊழியத் தண்டனைபெற்று, யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து இங்கு அனுப்பிவைக்கப்பட்டவன். சிங்களமொழி தெரியாதயிவன் அங்குபட்டபாடுகளை எழுத்தில் விழக்கவியலாது.

இவன், ஊரில்மேசன் தொழில்புரிந்தவன் என்றதினால், சிறையின் பாரியதொரு மீள்கட்டுமாணப்பணிக்கு இவனும் நியமிக்கப்படு;கின்றன். இத்தொழிலுக்குப் பொறுப்பான அதிகாரியாகவிருந்த சாவில்கமீட் என்னும் இஸ்லாமியருக்குத் தமிழ்மொழிதெரியுமென்பதால் கைதியான முத்துத்தம்பிக்கு அதுபெரும் ஆறுதலாக அமைந்தது.

அன்று, சிறைச்சாலையில் மதியஉணவாகச் சோறும், கத்தரிக்காய்க்கறியும், கடலைச்சுண்டலும், குழம்போடு மாட்டிறைச்சித்துண்டும் வழங்கப்பட்டன. அந்த இறைச்சியை அவன் எறியமுயல்வதைக்கண்ட சுதுபண்டா என்னும்கைதி ஏேட எறியாதை. தாஎனக்குயு என்று, தமிழில்கூறவும், வியப்போடு அவனைப்பார்த்தவன், அதை அவனுக்குக்கொடுத்தான். அந்தக்கணத்திலிருந்து, இருவருக்குமிடையே பேச்சுவழக்குத்தொடரவே, அது நாட்கள்நகர நட்பாகவளர்கின்றது.

சுதுபண்டா நுவரெலியா மாவட்டத்தைச்சேர்ந்தவன். சிறையில் செல்வாக்குப்பெற்ற கைதிகளுள் ஒருவனாக இவனுமிருந்தான். உத்தியோகம் பார்ப்பவர்களும், ஏனையகைதிகளும் அவனோடு சற்றுமரியாதையாகவே நடந்துகொள்வதைப் பார்த்தவனான முத்துத்துத்தம்பியும், அவனை நெருங்கிப்பழகவிரும்பினான்.

இரு அடுக்குகளைக்கொண்ட இந்தச்சிறைச்சாலையின், சிலுவைவடிவிலான பிரதானகட்டிடத்தில் நெடுநாட்தண்டனைக் கைதியான, முத்துத்தம்பி அடைக்கப்பட்டான். அங்குள்ள ஷேசெல்கள்யு என்று சொல்லப்படும் குறுகியதான அறைகளிலொன்றில் அவனோடுசேர்த்து மூன்றுகைதிகள் அடைக்கப்பட்டார்கள்.

அந்த இருவர்களும் தமிழ்தெரியாத அவர்கள் சிங்களவினத்தினராக இருப்பதால், அந்த முதல்நாளே அவன்பாடு பெருஞ்சங்கடமாகவிருந்தது.

மறுநாள் சுதுபண்டாவை அவன் சந்தித்தபோது, தான்பட்ட அவஸ்தைகளை அவனுக்குச்சொல்லித் துக்கபட்டவே, அவனைத்தேற்றிய சுதுபண்டா ஒேம்சரிவிடு முத்து. நான்யோசித்துப்பாக்கிறன். சிறையென்றால் இப்படித்தான். இதுவென்ன றெஸ்ட்கவுசோ! எட ஐஞ்சுவருசம் றிமாண்டிலை யாழ்பாணமறியல்விட்டிலை இருந்தவனல்லோநீ, அங்கே பெரியமண்டபத்திலே கனசனங்களோடை இருந்துபேசிச்சிரித்துச் சீவிச்சவுனக்குத் தண்டணைகிடைத்தபிறகு இதுவொரு புதியவனுபவம்தான்.

நான் ஒருத்தனைக் கொலைசெய்தவன். அதையொரு திட்டமிடாத தற்செயலான கொலையென்று என்ரைபக்க அப்புக்காத்துகள் வாதாடியதாலை, எனக்குக்கண்டீரோ எட்டுவருசச்சிறையிறைத் தண்டனைமட்டும் கிடைச்சது. அதிலையொரு நாலுவருசத்தை இஞ்சைகழிச்சிட்டன். மிகுதியாக நாலுவருசங்கள் கிடக்குது. நானிருக்கும்வரை எப்பவும் உனக்குவுதவியாக இருப்பன். ஒண்டுக்கும் யோசியாதை.யு என்றுகூறியவன், அவனின் தோளைத்தட்டி உற்சாகப்படுத்திவிட்டு எழுந்துசென்றான்.

ஒருவாரம் கடந்தபின்பு முத்துத்தம்பி மேல்மாடியிலுள்ள சுதுபண்டாவின் அறைக்குமாற்றப்பட்டான். அவர்கள் இருவருக்குமாகவே அந்தத்தனியறை ஒதுக்கப்பட்டிருந்ததால் இருவரும் பேசிமகிழ்ந்தவாறு, தங்களின்வாழ்வைச் சந்தோசமாகக்கழித்தனர். இருந்தபோதும் இவனுக்குமட்டும் ஏனிந்தச்சலுகைகள் கிடைக்கின்றன, இவன்யார் இவனுடைய வாழ்க்கைவரலாறு என்வென்றெல்லாம் அறியவேண்டுமென முத்துத்தம்பி ஆசைப்படுவதுமுண்டு.

காலம்நகரவே மூன்றுவருடங்கள் ஓடிமறைந்தன. இப்பொழுதெல்லாம் சிங்களமொழியில் சரளமாகஉரையாடப் பழகிக்கொண்ட முத்துத்தம்பி, தான்வயதில் மூத்தவன் என்றதைமறந்து, சுதுபண்டாவோடு பலதும்பத்தும் பேசியவனாகப் பொழுதுகளைப் போக்கியபோது, ஒருநாள் தனது கடந்தகாலவாழ்கைப்பற்றியும் சொல்லத்தொடங்கினான்..

நான்கண்டீரோ யாழ்பாணத்திலுள்ள வலுபின்தங்கிய கிராமத்திலை பிறந்தவன். என்ரையப்பு கள்ளுச்சீவிறவர். ஒருநாள் அவர் பனையாலை தவறிவிழுந்து செத்துப்போனார். உழைத்துத்தந்த அவரில்லாததாலை விட்டிலை சரியானசங்கள்பட்டோம். தின்னக்குடிக்கக் காசுக்குவளியில்லை. அதாலை நான் படிக்கிறதைவிட்டிட்டு என்ரை அக்காவின்ரை புருசனோடைசேர்ந்து கூலிவேலைக்குப் போனனான். அவர் மேசன்வேலை செய்தவர். சாராயம்குடிசுப்போட்டுவந்து, அக்காவைப்போட்டு அடிச்சுஉதைப்பார். காரணம் என்னவென்றால் அவர் என்ரை ரெண்டாவது அக்காவோடை தொடுப்பாம்.

ஒருநாள் அவரடிச்சு உதைச்சதிலை என்ரை மூத்தக்கா செத்துப்போனா. என்ரைகண்ணுக்கு முன்னாலைநடந்த இந்தச்சம்பவத்தை நான் அப்படியே பொலிசுக்காறன்களுக்குச் சொல்லவே.. எல்லாத்தையும் அவன்கள் எழுதியபிறகு, என்னட்டைக் கையெழுத்தும் வாங்கிப்போட்டு, அத்தானெண்ட அந்த மிருகத்தைப் பிடிச்சுக்கொண்டு போட்டான்கள். கீழ்க்கோட்டிலும் நான் என்ரைகண்கண்டதையெல்லாம் அப்பிடியே சொன்னனான்.

பிறகுவழக்குச் சுப்பிறீம்கோட்டுக்குப் போட்டுது. இந்தநேரத்திலை என்ரை இரண்டாவது அக்காவும்;, அம்மாவும் என்ரைசாட்சியை மாற்றிச்சொல்லும்படி கெஞ் சியழுததாலை கொலைநடந்ததை நான் காணவில்லையெண்டும், பொலிசுக்குப்பயந்துதான் அப்பிடிப்புசத்திப்போட்டன். எண்டும் சுப்பிறீம்கோட்டிலை சொன்னதாலை அத்தான் விடுதலையானார். சாட்சியத்தை மாற்றிச்சொன்ன குற்றத்துக்காக எனக்குப் பத்துவருசம் மறியல்கிடைத்தது என்று, அவன் சொல்லிமுடிக்கவும் சிரிச்சபடியே சுதுபண்டா தனது கதையைச் சொல்லத்தொடங்கினான்.

நான் ஒரு குறும்புக்காரப் பெடியனாக இருந்தவன். என்னைப்பெற்றவர்களும், என் அண்ணனும் அக்காவும் எவ்வளவு சொன்னாலும் எனக்கது ஏறவில்லை. எனக்கெண்டு சிலகூட்டாளிகளிருந்தனர். அவர்களுக்கெல்லாம் நான்தான்தலைவன். தினமும் பாடசாலைக்குப்போவன். ஆனாலும் படிப்பிலேகவனமேறாது. பின்னேரம் என்னசெய்யலாம் என்று எண்ணமிட்டவாறே இருப்பேன்.

எனது அப்பா மத்துமபண்டாவை ஊற்சனம்கையெடுத்துக் கும்பிடும். எங்கடையூரிலையுள்ள பெரியபான்சாலையிலே (புத்தகோவில்) எங்கடை அப்பாதான் எக்கவுண்டனாக இருந்தவர். அவரொருஆண்மீகவாதி, அந்தக் கேவிற்பொறுப்பாளரான புத்தகுருவின்ரை தனிப்பட்ட செயலாளரும் அவரேதான். அதனால், பலரும் என்ரைநடவடிக்கைகள்குறித்துக் கவலைப்படுவதாக அவருக்குக் கோள்கள்மூட்டுவதாலை, கோபத்தைஅடக்கமுடியது அப்பா என்னைப்பிடித்து அடிப்பார். அம்மாவோ இடையிலேபுகுந்து அப்பாவைவிலத்தி என்னைக்காப்பாற்றுவா. இது அடிக்கடி எங்கடைவீட்டிலை நடக்கும். ஒருநாள் ஓடிப்போய் ஆத்திலேகுதிச்சிட்டன். நீரோட்டச்சுளியிலே அள்ளுண்டுபோன என்னைப்பொடியாமத்துறு (இளைய புத்தகுரு) தான்காப்பாற்றினவர்.

இதையறிந்த எனது அப்பா என்னைப்பெரிய ஆமத்துறுவிடம் அழைத்துச்சென்று எனக்கு உபதேசங்கள்செய்யுமாறு கேட்டுக்கொள்ளவே, அவரோ என்னைப்பார்த்து முறைத்தார். தமது சிவந்தபுருவங்களை நெரித்தபடி என்னைப்பிடித்து உலுப்பினார். பின்பு அவர் பெருமூச்செறிந்தவாறு, போடாபோ! நல்லபிள்ளையாயிரு. அல்லாட்டி நாசமாய்போவாய்யு என்றுசொல்லியவாறு எழுந்துசென்றுவிட்டார்.

அந்தநாளிலிருந்து அடங்கிச்சிறிதுகாலம் இருந்தேன். ஆனால், எனது நண்பர்களின் அழைப்பை அசிரத்தைசெய்து ஒதுங்கிருக்கமுடியாது பழையபடியே அவர்களோடுசேர்ந்து பாரியகுழப்படிகளில் ஈடுபட்டேன். எனது வயதுதான் வளர்ந்ததேயன்றி வாழ்க்கையோட்டத்தில் மாற்மேற்படவில்லை. அதனாற்றான் இன்று ஒரு கொலைகாரனாகி சிறையிலே வாழிறன்.

கொலைநடந்தவன்று நண்பர்களோடுசேர்ந்து, கேித்துள்மரத்துக் கள்ளுக்குடித்திருந்தன். அந்தவெறியோடை மலைக்குறுக்குப் பாதையாலை நான் நடக்கவே, தேயிலைத்தோட்டத்து வேலையைமுடித்துவிட்டு வந்துகொண்டிருந்த நாகம்மை என்ற வடிவான பொம்பிளையை மறித்துப்பிடித்துப் புதருக்குள்ளைத்தள்ளி விழுத்தி, அவள் கத்திக்குழக் கட்டிப்புரட்டிக் கற்பளிக்கமுயன்றபோது, அவள்போட்ட கூக்குரலைக்கேட்டு அவளின்ரைபுரிசன் காளிமுத்து கத்தியோடைவந்து என்னைத்துரத்தவே, நான் மலையிலையேறியோட வெட்டவந்தவன் எனக்குக்கிட்ட நெருங்கவே, கல்லுப்பாறையொன்றை உறுட்டிவிட்டனான். அதிலைஅகப்பட்டுநசிந்து அந்த நாசமாய்போவான் செத்ததாலை நான் இவ்வளவுகாலமும் இஞ்சையடைபட்டுக்கிடக்கின். என்றுசொல்லிவிட்டு எழுந்த சுதுபண்டா சிறைக்கூடத்தின் வெளிமுற்றத்தைநோக்கி நடந்தான்.

மூன்றுவருடங்கள் ஒன்றாய் ஒரேயறையில் சிறையிருந்தபோதும், அவன் தன்ரைகதையைச் சொல்லாமல் இருந்துவிட்டதையும், இன்று அதையவன் சொன்னதையும், தன்னுடைய கதையை அவன் கேட்டதையுமெண்ணி;ச்சிரித்து வியந்தவாறு வெளியேறிய முத்துத்தம்பி அவனைத்தொடர்ந்து மைதானத்தில் உலாவினான். இவைநடந்து ஒருவாரம் கடந்தபின்பு, சுதந்திரதினத்திலன்று மன்னிப்புப்பெற்று வெளியேறிய கைதிகளில் ஒருவனாகச் சுதுபண்டாவும் விடுதலைசெய்யப்பட்டான்.

அவன்சென்று மூன்றாவதுநாள் பெருத்ததொரு திகில்நிறைந்த செய்தியை உத்தியோகிஸ்தர் சாவில்கமீட் முத்துத்தம்பியிடம் சொன்னார் எட உன்ரை நண்பன் சுதுபண்டாவல்லோ நேற்றைகுச் செத்துப்போனானெண்டு எங்கடை பிரதம ஜெயிலருக்குத் தகவல்வந்திருக்கு. அந்தத்தோட்டக்காட்டுத் தமிழ்பொம்பிளை நாகம்மை கத்தியாலை அவனை வெட்டித்துண்டாடிப்போட்டாளாம்! என்றவர் கூறவே, எதுவும்பேசாது சிறிதுநேரம் வேலையைநிறுத்தித் தாமதித்தவன், சீமேந்துக்கலவையைச் சாந்தேப்பையால்அள்ளி ஓங்கிவீசிச் சுவரிலையப்பிய வண்ணம், தனது பூச்சுவேலையில் மும்முரமாய் ஈடுபட்டான்.

# பரிதி கவிதை

## யார் இவள்..?!

*ஆறறிவுக்கெட்டாத*
*அண்டம் இவளோ ..?!*
*தேனுருகிப் பாயுமந்த*
*கங்கை இவளோ ..?!*

*கண்கவரச் செய்யுமந்த*
*வண்ணம் இவளோ ..?*
*முத்தங்களுக்கேங்கி நிற்கும்*
*கன்னம் இவளோ ..?*

*கண்களுக்கு எட்டாத*
*காற்றும் இவளோ ..?!*
*கோபமுற்ற கண்ணகியின்*
*கூற்றும் இவளோ ..?!*

*கற்பனையில் ஓடுகின்ற*
*தேடல் இவளோ ..?!*
*கள்ளத்தனம் பூணுமந்த*
*ஊடல் இவளோ ..?!*

*பெய்யும் மழை ஓரம்வரும்*
*சாரல் இவளோ ..?!*
*மெய்யுருகி ஓடச்செய்யும்*
*பாடல் இவளோ ..?!*

*சொற்பதங்கள் கொஞ்சுகின்ற*
*பேச்சும் இவளோ ..?!*
*அற்புதங்களான உயிர்*
*மூச்சும் இவளோ ..?!*


*அன்பினதன் ஆழமுள்ள*
*வேரும் இவளோ ..?!*
*ஆழியெனப் பரந்துள்ள*
*நீரும் இவளோ ..?!*

*குமிழுடன் காற்றுக்குள்ள*
*மென்மை இவளோ ..?!*
*தமிழுடன் இசைக்குள்ள*
*தன்மை இவளோ ..?!*

*இருள்பட ஆரம்பிக்கும்*
*இன்பம் இவளோ ..?!*
*விரல்தொட தாமதிக்கும்*
*துன்பம் இவளோ ..?!*

**வண்ணை தெய்வம்**

# பிளாக் அன்ட் வைற் ஸ்காட்ச் விஸ்க்கி



டிறிங் டிறிங் .. டிறிங் .. டிறிங்..

நேரம் 4-45. காரியாலயம் மூடுவதற்கு இன்னும் பதினைந்து நிமிடங்கள் இருக்கின்றது. வழமையாகவே வெள்ளிக் கிழமைகளில் எல்லா அரசாங்கக் காரியாலயங்களும் இப்படித்தான்! ஐந்து மணியாகும்போது பீயோனனைத் தவிர எல்லோருமே தங்கள் தங்கள் வேலைகளை முடித்துவிட்டுச் சென்றிருப்பார்கள். ஆனால் பாலனுக்கு இது மற்றய வெள்ளிக் கிழமைகளைவிட மிகவும் விசேசமானது! காரணம் மூன்று மாதத்திற்குப் பிற்பாடு நான்கு நண்பர்கள் ஒன்றாகச் சேர்ந்து தண்ணியடிப்பதற்காக ஏற்பாடு செய்திருந்த நாள்!. வெளிக்கிடுவதற்குத் தயாராக இருந்த அந்த நேரத்தில்த்தான் ரெலிபோன் மணி அடித்தது.

“யாராக இருக்கும்? தண்ணியடிப்பதற்கு காத்திருக்கும் மற்றய நண்பர்கள் மூவரில் ஒருவராக இருக்குமோ? .. இவ்வளவு அவசரப்படுகின்றார்களே” என மனதுக்குள் திட்டியபடி றிசீவரை எடுத்து “ஹலோ பாலன் ஹியர்”

“யாரு? பாலுத் தம்பியா? நான் பிரான்ஸிலை இருக்கிற சறோவின் மாமா கோபாலசிங்கம் பேசுறன்”.

கோ.. கோ.. கோபல.. அப்படியொரு

மாமா பிரான்ஸிலை இருப்பதாக மனைவி சறோ எப்பவோ சொன்னதாக ஞாபகம். ஆ.. ஆ.. கோபால் மாமாவா தெரியுது! குரல் கிட்ட இருந்து கதைக்கிறமாதிரிக் கேக்குது! எங்கையிருந்து பேசிறியள்?" கீறல் விழுந்த கிறாமப்போன் தட்டில் இருந்து வந்த சத்தம்போல் விக்கி விக்கி வந்தது பாலனின் குரல்.

"நான் கொழும்பிலை எயாபோட்டிலை இருந்துதான் பேசுறன். ஆறுமாசத்துக்கு முன்னம் சறோவின்ர கல்யாணத்திற்கு வர்றதுக்காக இலங்கைக்கு வெளிக்கிட்ட பயணம் இப்பத்தான் சரிவந்திருக்கு. வர்ற நேரத்திலை சொல்லுவம் எண்டு யாழ்ப்பாணத்துக்கு உங்க வீட்டுக்கு எடுத்தா நீங்கள் கொழும்பிலைதான் இருக்கிறதா சறோதான் சொல்லி உங்க நம்பரும் விலாசமும் தந்திது. இன்னும் கொஞ்ச நேரத்திலை நான் உங்க வீட்டை வந்திடுவன்."

"ஐயோ மாமா சறோ வீட்டிலை இல்லை! அவ யாழ்ப்பாணம் போயிட்டா!".

"தெரியும் தம்பி, சறோ சொல்லீட்டா தான் யாழ்ப்பாணத்திலைதான் நிக்கிறதா. தம்பி நான் இண்டைக்கு இரவு உங்களோடை தங்கி இருந்திட்டு நாளைக்கு யாழ்ப்பாணம் போகலாம். நீங்க வீட்டிலை இருங்க தம்பி உடனை வந்திடுறன்

"நான் இப்ப கந்தோர்லை நிக்கிறன். வீட்டை வர இன்னம் நாப்பது நிமிசமாவது ஆகும்."

"அதுக்கென்ன பரவாயில்லை. நான் முன்னதா வந்தா வீட்டு வாசல்லேயே நிக்கிறன். நீங்க நிதானமா வாங்க தம்பி".

போனைக் கட் செய்ததும் எரிச்சலாக இருந்தது பாலனுக்கு. "வீட்டுக்கு வர்றவர் அதுவும் வெளிநாட்டிலை இருந்து வாறவர்! முன்னமே அறிவிச்சிட்டு வரக்கூடாதா? கொஞ்சமாவது நாகரீகம் வேண்டாம்!!".

போன் செய்து நண்பன் மாறனைத் தொடர்பு கொண்டான். "இண்ணைக்கு புரோக்கிராம் கான்சல். எதுவும் வாங்க வேண்டாம்".

"என்ன வாங்க வேண்டாமா? இவ்வளவு நேரமும் வாங்காமல் இருப்போமா? இரண்டு போத்தல் வாங்கியாச்சு! அதுவும் பாரின் சரக்கு பிளாக் அன்ட வைற். சைற் டிஸ்க்கிக்கு செல்வம் முனியாண்டி விலாசிலை கோழிக் குறுமா கட்டியாறனெண்டு சொல்லியிருக்கான். இரவுச் சாப்பாட்டிற்கு ராகவன் மட்டன் புரியாணி கட்டியாறத்ச் சொல்லியிருக்கான். நீ இப்ப போய்க் கான்சல் எண்டு சொன்னா எப்பிடிடா?"

"மனிசின்ரை மாமா ஒருத்தர் பிரான்சிலை இருந்து வந்திருக்கார்டா!" பாலன் இழுத்து இழுத்துச் சொன்னான்.

“மனிசிதான் வீட்டிலை இல்லையே! எதையாவது சொல்லிக் கழட்டி விடு மச்சான்.”

“அதெல்லாம் சொல்லிப் பாத்திட்டன். மனுசன் இண்டைக்கு ராத்திரி வீட்டை தங்கீற்று நாளைக்கு யாழ்ப்பாணம் போறதாச் சொல்றாற்ரா!”

“எவ்வளவு நாட்களுக்கப்புறம் தண்ணியடிக்கலாம் எண்டு நாலுபேரும் சேர்ந்து பிளான் பண்ணின பாட்டிதா இது”.

வைஃப் யாழ்ப்பாணம் போறதெண்டு சொன்னதாலை பார்ட்டியை எங்க வீட்டிலேயே வைச்சுக்கலாம் எண்டு நான்தான் சொன்னன்.ஆனா நந்தி மாதிரி திடீரெண்டு இந்தாள் வந்து நிக்கிறாரே! என்ன செய்ய?”.

“அது சரி சரக்கு வாங்கியாச்சே?”

“அதை பத்திரமா வைச்சிரு. இன்னொரு நாள் பிளான் பண்ணலாம்”.

“உனக்காக எல்லாம் போட்ட பிளானை நிப்பாட்டேலாது. நாங்க மூண்டு பேரும் பார்ட்டியை நடத்திறம். முடிஞ்சா வரப்பார்” பதிலுக்குக் காத்திருக்காது ரெலிபோனைக் கட் பண்ணிவிட்டான் மாறன்.

பாலனின் கோமமெல்லாம் இப்பொழுது மனைவி சறோ மீது திரும்பியது. உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு ரெலிபோன் எடுத்தான். மறு முனையில் சறோவே றிசீவரை எடுத்தாள்.

“என்னங்க.. மாமா பிரான்சிலை இருந்து வந்திருக்கிறார். வீட்டுக்கு வருவார். நான் இல்லையெண்டு சும்மா இருந்திடாதீங்க. ஹோட்டல்லையாவது சாப்பாடு எடுத்து வடிவாக் கவனியுங்க”. பாலன் என்ன செய்யவேண்டும் என்பதை பட்டியலிட்டாள் சறோ.

“ஏண்டி பிரான்ஸிலை இருந்து வாற உன்ரை மாமாக்கு ஒரு டீசென்ஸ் தெரியவேண்டாமா? வெளிக்கிடேக்கே ரெலிபோன் பண்ணினா என்வாம்!”.

“ஏன் உங்களுக்குச் சொந்தமே இல்லாதவங்களெல்லாம் கொழும்புக்கு எந்த அலுவலா வந்தாலும் எங்க வீட்டைதானே வந்து தங்குவாங்க. அப்பவெல்லாம் உங்களுக்கு சொல்லிப் போட்டுத்தான்; வந்தாங்களா? என் மாமா சொல்லாம வந்ததுதான் தப்பா?” சறோவின் குரலில் கொஞ்சம் கோபம் தெரிந்தது.

“நான் என்ன சொல்ல இவள் என்ன சொல்லுறாள்” மனதுக்குள் புறுபுறுத்தான் பாலன்.

“என்ன சத்த்தைக் காணம்?”.

“இல்லடி எனக்கு வேறையொரு புறோக்கிறாம் இருக்கு அதுதான்..”

“என்ன புறோக்கிராம்?”

“அது..அது.. என்னோடை வேலை செய்யிற பிறெண்டின்ரை பிள்ளையோடை பேத்டே. அதுதான்..”

“என்னங்க பிரான்சிலை இருந்து வாற மாமாவைவிட பிறெண்டு முக்கியமா?”

“முக்கியமெண்டு இல்லை ..” அதுக்கு மேல் கதைத்தால் தமக்குள் சண்டையாகிவிடும் என்பதால் பாலன் எதுவும் கதைக்கவில்லை.

“அப்புறம் அவர் வெளிநாட்டிலை இருந்து வர்றவர் நம்ம வீட்டைப் பாத்துத்தான் நம்மளையும் எடைபோடுவார். அவர் வர்றதுக்கு முன்னமே வீட்டுக்குப் போய் வீட்டை கிளீன் பண்ணி வச்சிடுங்க, உங்க சிகரெட் வாடை இல்லாம ஸ்ப்ரே அடியுங்ங, உங்கடை பியர் ரின்களையெல்லாம் மறைச்சு வையுங்ங, நீங்க மருந்துக்கு பனங்கள்ளுக்கூட குடிக்கமாட்டீங்க எண்டு சொல்லி வைச்சிருக்கிறன்! கவனமா பாத்துக்குங்க.” சறோ போனைக் கட் பண்ணிவிட்டாள்.

“எனக்குக் கடவுள் தலையிலை எழுதி வைச்சிட்டான் இண்டைக்கு தண்ணிணடிக்கக்கூடாது எண்டு” என மனதுக்குள் புழுங்கியபடி பாலன் வீட்டுக்கு வந்தபோது வாசலில் பிரான்ஸ் மாமா இல்லை! “வரும்போது வந்து தொலையட்டும்” என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டே வீட்டுக்குள் வந்தவன் வீட்டைக் கொஞ்சம் ஒழுங்கு படுத்திவிட்டு ஹாலில் ரி.வி பார்த்துக்கொண்டிருந்தபோது ஹாலிங் பெல் அடித்தது. கதவைத் திறந்தால் எதிர்பார்த்தபடியே பிரான்ஸ் மாமா!.

“வாங்க மாமா”

“தம்பி நான் சறோவிற்குத்தான் மாமா. உங்களுக்குச் சித்தப்பா முறை.” பெரிய ஜிஜலீக் ஒன்றைச் சொன்னதுபோல பெரிதாகச் சிரித்தார்.

மனதிற்குள் முறைத்தபடி “உள்ளை வாங்க சித்தப்பா” என்று சொல்லியபடி அவரின் சூட்கேசை வாங்கிப் பக்கமாக வைத்தான். அதற்குப் பக்கத்திலேயே தனது தோளில் இருந்த ரவலிங் பாக்கை வைத்த கோகபால் மாமா வீட்டைச் சுத்தி ஒரு நோட்டம் ;விட்டார்.

“பரவாயில்லையே சறோ வீட்டிலை இல்லாட்டியும் வெள்ளைக்காறன் மாதிரி வீட்டை நல்லா நீற்றா வைச்சிருக்கிறியள்”. பாராட்டுப் பத்திரம் வாசித்தார்.

பாலனின் நினைவெல்லாம் நண்பர்களையே சுற்றிச் சுற்றிச் சென்றது. ம்இப்ப

ஒரு போத்திலை முடிச்சிருப்பாங்கள்.."

"என்ன மாப்பிளை ஏதோ யோசினையிலை இருக்கிறமாதிரித் தெரியுது".

"அது நீங்க ரெலிபோன் பண்ணினதும் அவசரத்திலை வந்தாலை கந்தோர் நினைவு..".

"மாப்பிளை வேலையைப் பற்றி வீட்டிலை யோசிக்கக்கூடாது. வேலை செய்யேக்கை இறுக்கமாய் இருக்கிற மூளை வீட்டை வந்தவுடனை பிரீயாகி சந்தோசமாய் இருக்கவேணும். அப்பிடி வாழ்றதாலைதான் வெள்ளைக்காரன் சந்தோசமாய் வாழ்றான்" பாலனுக்கு பாடம் எடுத்தார் பிரான்ஸ் மாமா.

நான் எத்தினை நாள் பிளான் பண்ணி இண்டைக்கு சந்தோசமாய் இருக்க எவ்வளவு ஏற்பாடெல்லாம் செய்து வைச்சிருந்தன். எல்லாத்தையும் குழப்பிப் போட்டு சந்தோசமாய் இருக்கிறது எப்பிடியெண்டு அட்வைஸ் பண்ணுறாராம். மனதுக்குள்புறுபுறுத்துக் கொண்ட பாலன் அதைக் காட்டிக் கொள்ளாமலேயே "சறோ இல்லாததாலை சமையலும் இல்லை.. வாங்க ஹோட்டலுக்குப் போய் டின்னர் சாப்பிட்டு வருவம்ே என்றான்.

ஹோட்டல் எல்லாம் வேண்டாம் தம்பி. சறோ இல்லையெண்டதுமே நான் வர்ற வழியிலையிலேயே ரெண்டு பேருக்கும் மட்டன் பிரியாணி வாங்கிட்டு வந்திட்டேன்.

"மட்டன் பிரியாணியா?"

"பிரியாணி மட்டுமில்லைல! சைற் டிஸ்க்கிற்கு கோழிக் குறுமாவும் வாங்கியந்திருக்கிறேன்."

"கோழிக் குறுமாவா?"

"அப்ப! பிரான்ஸிலை இருந்து வாறன். சும்மாவா வருவன்" தனது டிரவலிங் பாக்கைத் திறந்து எடுத்தார் ஒரு லிற்றர் பிளாக் அன்ட வைற் முழுசிக்கொண்டு நின்றது.

"பிளாக் அன்ட் வைற்றா?"

"நான் பிரான்சிலை இருந்து வாறன். உந்த போலி மரியாதை ஒண்டும் வேண்டாம் மாப்பிள்ளை. சறோவும் இல்லை வசதியாப் போச்சு! ரண்டு பேரும் இண்டைக்கு சந்தோசமா இருப்பம்".

பாலா நீ இண்டைக்கு தண்ணியடிக்க வேணுமெண்டு உன்ரை தலையிலை கடவுள் எழுதி வைச்சிருக்கடா! என்று பாலனின் மனம் குதூகலித்தது!

பிளாக் அன் வைற்றைத் திறந்து ரண்டு கிளாசிற்குள்ளும் அளவாவக கோபால் மாமா விட அதற்குள் ஐஸ் கட்டிகளைப் போட்டுக்கொண்டிருந்தான் பாலன்.

●

## அடியாத்தி

முகம் மூடி வெட்கப்பட்ட
அகம் மறந்து சிக்கிக்கிட்டன்

சிரிப்பை அடக்க முடியல உனக்கு
சிரிச்ச முகம் முடியல எனக்கு

பேச வார்த்தை இல்ல உனக்கு
பேசியும் வார்த்தை இல்ல எனக்கு

சிரிச்சிகிட்டே அழுத நீ
அழுதுகிட்டே சிரிச்சன் நான்

அடித்தொண்டையில என்னமோ அடைக்குது
ஆனாலும் அல்லிமுகம் ஜொலிக்குது

அன்பெண்ணும் பத்து விரலும் பதறுது
அடியாத்தி அழகு கம்மல் விசும்புது

சீக்கிரம் பாக்கணும் சொல்ல வரல எனக்கு
சீவி சினுக்கெடுத்து பதறும் கண்ணு உனக்கு

அலைபேசி திருப்ப ஆகாயம் உனக்கு
ஆகாயம் திரும்ப அலைபேசுது எனக்கு



# வசந்ததீபன் கவிதைகள்

## ஒரு கொடியில் இரு மலர்கள் ஒன்று

நெடிது உயர்ந்த கோபுரங்கள்
நீண்டு அகன்ற பிரகாரங்கள்
பளிங்குக் கல் மண்டபங்கள்
பளிச்சிடும் பல் வண்ண ஓவியங்கள்
நெய் மணக்கும் மடப்பள்ளி
தூய்மை ஒளிரும் நடைபாதைகள்
பூக்களைப் போர்த்தியிருக்கும் சிலைகள்
நறுமணத்தில் மூழ்கியிருக்கும் சூழல்
மனித வாசமற்ற தீவாய்
தனித்துப் புழுங்கி வியர்க்கும்.

●

## இரண்டு

ஒண்ட இடமாற்ற
தெருவோர இடைவெளியில்
கூரையற்று.. மதிலுமற்று..
அக் குடும்பங்கள்
உயிர்த்திருக்கும் வீடு..?

துர் நாற்றம் கமழும் சாக்கடைகள்
கொசுக்களின் நச்சுப் பிடுங்கல்கள்
வாகனங்களின் ஓங்காரக் குடைச்சல்கள்
பெருச்சாளிகளைத் துரத்தும் பூனைகள்
நாய்களின் அடித்தல் பிடித்தல்கள்
சிலுப்பிச் செல்லும் பன்றிகளின் பன்னீர்
தெளிப்புகள்
மழையின் வெறிக் குத்தல்கள்
காற்றின் புழுதித் தூற்றல்கள்
வெயிலின் ஆக்ரோசக் குதறல்கள்
கடைக்காரர்களின்.. வழிப்போக்கர் களின்..
ஏச்சுகள்.. எள்ளல்கள்..
டாணாக்காரர்களின் தனீ..
கவனிப்புகள்..
அத்தனைக்கும் நடுவில்
வேலை செய்து
சம்பாதித்து
சோறாக்கித் தின்று
சிரித்து.. அழுது..
புணர்ந்து
பிள்ளைகள் பெற்று.. வளர்த்து
சண்டையிட்டு
கண்ணீர் , உதிரம் வடித்து
உறங்கி.. விழித்து..
கழியும் நடைபாதைகளென்று
அவர் தம் வாழ்வு...

சிறிதும்
சிலிர்ப்பற்ற காலங்களாய்
நிதம்
சிலைத்து உறைந்து
கொண்டேயிருக்கின்றன.

●

**மகிழ்ச்சி ஆ.ராம்குமார்**



# வீரய்யா

என்னய்யா எதாவது தேறுமா ..என்றார் நடேசன்.வாய்ப்பில்லய்யா..மூனு நாளா அன்னந்தண்ணி இல்ல..படுக்கையிலே பீ,மூத்ரம் எல்லாம் போகுதுனு சொன்னாங்க.. எப்படியும் காப்பாத்திபுடலாம்னு அரியலூர் பெரிய ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்காங்க என்று ராமசாமி சொல்லிக் கொண்டிருப்பதை கேட்டு மனம் பதறிப் போனேன்.அவரை பற்றி எண்ணங்களும் ,நினைவுகளும் அசைப் போட துவங்கியது.

நான் பார்த்த முதல் ஹீரோவும் கடைசி ஹீரோவும் அவராகத்தான் இருக்க முடியும். நீங்கள் நினைக்கலாம் வயசான கிழவன், உனக்கு ஹீரோவா? என்று.ஆம்..அவர் என் கண் முன் வாழ்ந்த உண்மையான ஹீரோ.ஹீரோ என்றால் சினிமாவில் வரும் கதாநாயகர்களை போல் திரையில் ஒன்று வெளியில் ஒன்று பேசுவதைப் போல் அல்ல. அவர் வாழ்க்கையை கொள்கையோடு வாழ்ந்த மனிதர்.அவர் பெயர் சொல்லும் போதே ஒரு வீரம் வரும்.அவர் இப்படி உடல் நிலையற்று கிடப்பதை நினைத்து என் மனம் பித்துப் பிடித்த நிலையை அடைய தொடங்கியது.

அவர் அம்பேத்கர் நகரின் குடிசை வீட்டில், மக்களின் கூட்டங்களோடு புன்னகையோடு வாழ்ந்த காலம் நினைவில் ஊசலாடுகிறது.ஊரில் உள்ள பலரால் திமிரு பிடிச்சவன்,யாருக்குமே அடங்கமாட்டா,ஊராகாளினு ,அவரை போனப் பிறகு பல கூட்டம் புரளிப்பேசும் .நானும் பல முறை திமிர் பிடித்தவர் என்று தான் நினைத்திருக்கிறேன்.நேர்மையாவும் உண்மையாவும் இருந்தா திமிரு இருக்கத்தான செய்யும்.அவரை நான் கடைசியாக பார்த்த நினைவும்,அவர் தோரணையும் கண்ணெதிரே தோன்றி மறைகிறது.

அவர் பெயருக்கு ஏற்ற மாதிரி கம்பீரமானவர்.வீரய்யானு சொல்லும் போதே ஒரு திமிர் வருதுல.நீங்கள் நினைக்குர மாதிரி கோவணம் கட்டிக்கிட்டு,வீட்டை விட்டு வெளியில் வரும் போது மட்டும் தான் மிடுக்கா வருவார்னு நினைக்காதீங்க. மனுச எப்போதுமே எந்த கரையுமில்லாத வெள்ளை வேட்டி,வெள்ளை சட்டை தான் போட்டிருப்பார்.அதுவும் உடல் கட்டுமஸ்திற்கு ஏற்றார் போல்,சட்டையின் கையை முட்டிக்கு மேல் மடக்கிவிட்டு,மீசையை முறுக்கிக்கிட்டு,நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு வீரய்யா என்ற பெயருக்கு ஏற்றவாறு தலை நிமிர்ந்து நடந்து வரும் போதே நமக்கு வீரம் வரும்.என் இளமைக்காலம் முழுவதுமே அவரைப் பற்றி சிந்தனைகள் ஓடியது. அவரைப் போல் நடப்பது, சிரிப்பது என பல செய்கைகளை செய்து பார்த்தேன். ஆனால் அவரைப் போல் வாழ்வதென்பது கடினம் என அப்போது தெரிய வில்லை. ஏனென்றால் அவர் வெறுமனே எனக்கான ஹீரோ அல்ல. அவர் திமிர் பேச்சுக்கும்,மிடுக்கான உடைக்கும் இங்கு யாரும் பயப்படுவுமில்லை.அதனால் இவ்வளவு மரியாதையும் அல்ல.எங்களுக்கு தெரிந்து எங்கள் ஊரின் முதலும் கடைசியுமான போராளியாகத் தான் இருக்க முடியும்.எனக்கு நன்கு விபரம் தெரிவதற்கு முன்பு நடந்த விசயம்.இதை என் அப்பா என்னிடம் சொல்லிருக்கிறார்.அதுவும் இன்று கீழத் தெருக்களில் பலரும் தலை நிமிர்ந்து,எதிர்த்து பேசும் அளவிற்கும்,வெளியில் போய் பலரும் படித்து பெரிய ஆட்களாக வளர்ந்திருப்பதற்கு அந்த சம்பவம் ஒரு முக்கிய காரணம்.

சரியாக நினைவுக்கு வர வில்லை வருடம்.எப்போதும் போல வீரய்யாவும், அவரோட கூட்டாளிகளும் டீக்கடைக்கு போகுரது வழக்கம்.அதும் கடை மேலத்தெரு

சுப்ரமணி தான் வைத்திருந்தார்.அங்கு ஒரு சின்ன வாய் தகராறு நடந்துக்கிட்டு இந்தது. அதை கண்டும் காணாமலும் வீரய்யாவும் அவரது கூட்டாளிகளும் ஆளுக் கொரு டீ யை சொன்னாங்க.வாய் தகராறு செஞ்சுக்கிட்டு இருந்தவனுடைய கொரலு ஒசர ஆரம்பிச்சுது.வீரய்யா கண்டுக் கொள்ளவில்லை. எதுக்கு வேலியில போர ஓணான வேட்டிக்குள்ளவுட்டுகிட்டு என்று நினைத்து அமைதியாக உட்கார்ந்து, அந்த வழியே போன வெள்ளமுத்துவை கூப்பிட்டார்.வீரய்யா கூட்டு வரலனா என்ன மரியாத இருக்குனு நினைத்துக் கொண்டே.சொல்லுங்கய்யா என்றான் என்ன இந்த வருசம் வெள்ளாமைலாம் எப்படி வரும்.பருத்தி போட்டுருக்கியே எதாவது தேருமா என்றார். தெரியலைங்கய்யா..எதோ காத்துலப் போர பஞ்சுக்காசாவது வந்தா தேவலாம் என்றார். சரியாக ங்கய்யா, காட்டுக்கு நேரமாவுது நா போய்ட்டு வரனு சொல்லிட்டு வெள்ளமுத்து கறுக்கருவாளை தலப்பாவொட பக்கவாட்டில் சொருகி நடையைக் கட்டினான் .சுப்ரமணி எப்போதுமே வீரய்யாவை பேர் சொல்லியே கூப்பிட மாட்டார் அவங்க ரெண்டு பேரு நாளாவது வரை ஒன்னா படிச்சவங்க.அப்போ ஒரு சின்ன சண்டையில அவரு மண்டய ஒடச்சிட்டாரு.அப்போ இருந்து அய்யானு கூப்பிடுவதோடு நிறுத்துக் கொண்டார்.அய்யா.. இந்த டீ என்று கத்தினார்.யோ எடுத்துக்கிட்டு வாயானு எதிர் குரலெழுப்பினார் .சுப்ரமணி ..இவ மட்டும் தா நம்மல மதிக்கவே மாட்டுகுரா என்று புலம்பிக் கொண்டே எடுத்து வந்தார்.வரும் வழியில் வாய் தகராறு செஞ்சுக்கிட்டிருந்தவ டீ கிளாசை தட்டி விட்டு,இப்படிலாம் இருக்குறதாள தான் ஒருத்தனு நம்மல மதிக்க மாட்டுக்குறானுங்க என்று வீரய்யாவைப் பார்த்து முறைத்துக் கொண்டே சொன்னான். வீரய்யா..உடனே எழுந்த ..உனக்கு இப்போ என்னடா பிரச்சினை. டீக்கடையில காசு குடுத்துதான நாங்க டீ குடிக்கிறோம்.பொறவு..ஒனக்கும் எனக்கும் என்னடா தனித்தனியா மரியத வேண்டிருக்கு.ஒனக்கு புடிக்கலனா நீ வேறக்கடைக்கு போ என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே. ..போட..ங்க ...இவுரு பெரிய மயிரு ..இவுரு சொல்லி நா கேக்கனும்..நாங்க சொல்லுறத கேளுங்கடா.. இனிமேல் ரெண்டு கிளாசு தா ..ஒங்களால என்ன முடியுமோ பாத்துக்கோங்கடா என்று சொன்னதும்.வீரய்யா ..கொஞ்சங்கூட யோசிக்காக, விட்டத்துக்கு மேல கட்டிவச்சிருந்த கட்டையை உருவி... ஓங்கி அடிச்சாரு.அடிக்க கையை ஓங்க..ஓங்க..நீ யென்ன பெரிய மயிரானு சொல்லி சொல்லியே அடித்து விரட்டிக் கொண்டே தெருவை அடைந்தார். மேலத் தெரு ஆளுங்க எல்லாம் வீரய்யாவை சுற்றி வளைச்சிட்டாங்க...வீரய்யா செலம்பம் சுத்த தெரிஞ்சவருங்குறதால.சுத்தி இருக்குறவங்க நெருங்காம இருக்க.பக்கத்துல இருந்த குச்சி போர்ல ஒரு பெரிய பெரம்பை உருவி சுத்த ஆரம்பிச்சார்.கீழத் தெருவ வந்து சேர்ற வரயிலும் ,சுத்திக்கிட்டே வந்தாரு.

என்ன செய்றதுன தெரியல..மேலத் தெருவுக்கும் கீழத் தெருவுக்கும் எப்ப சண்ட ஆரம்பிக்கும்னு தெரியாம ஊரே பரப்பரப்பா இருந்துச்சு..ஆனால் வீரய்யா பயப்படுவதா

தெரியல.அந்த மனுச சண்டைக்கு எதிர்பார்த்து காத்துக்கிட்டு இருந்த மாதிரியே தோனுச்சு. பல பொம்பளைங்க...அந்த மனுசனுக்கு வாசாப்புவுட ஆரம்புச்சுதுங்க.இன்னும் சில பேர்..அவ திமிரு புடிச்சவ ..யாருக்குமே அடங்கமாட்டா...என்றும். ஒரு பொறம் மேலத்தெரு மொத்த ஆளுங்களும் கீழத் தெருவுக்குள்ள நுழைய காத்துக்கிட்டு இருந்தானுங்க.மனுச பெருக்கேத்த மாதிரி வீரமன மனுச தான்னு கூட்டாளிங்க யெல்லாம் பெருமயா இருந்தாங்க.சண்டைய காரணமா வச்சி..வீரய்யா, கீழத்தெருவுல ஒரு கூட்டத்த கூட்டுனாரு.அப்போ தான்...இனிம யாருமஸ கீழத்தெருவுல இருந்து.. பற அடிக்க போகக்கூடாது,பண்ணையடிக்க போகக்கூடாது ..ரெண்டு கௌாசு வச்சு டீ கொடுக்குர டீக்கடைக்கு போகவே கூடாதுனு கூட்டத்துல பேசினார்.கூட்த்துல இருந்த பலரும் கெடைக்குர கஞ்சுக்கு வக்கு இல்லாம ஆக்கிப்புட்டா இந்த மீசக்காரனு பொலம்ப ஆரம்பிசயசாங்க..அவங்களுக்கு தெரியல ..அந்த மனுச சுயமரியாதையா எல்லாரையும் நடத்துனுந்தா கேக்குராறுனு.

பொழுது இரவை எட்டிய தருணம். வீரய்யாவும், அவரு பொண்டாட்டியும் எந்த ஒரு பயமுமில்லாம கூட்டத்தோட கூட்டமா ஒக்காந்துருந்தாங்க. சில பேர் தூக்கம் வருதுனு சொல்லிட்டு வீட்டுக்கு போய்ட்டாங்க...சில பேர் நமக்கு எதுக்கு பிரச்சினைனு வெளியவே வரல.கூட்டம் குறைவதை நெனச்சு ஒரு துளி வருத்தம் கூடப் படலா.. அய்யா.ஆனா நம்ம உயிர் விடியிற வரை இருக்குமானு தெரியல.உசுரு போகறதுக்குள்ள இந்த சனங்க எல்லா நா செஞ்சது சரிதானு புரிஞ்சுக்கிட்டா போதும் என்று ,பொண்டாண்டியிடம் புலம்பினார்.நேரம் ஒம்போது மணியாச்சு..மேலத்தெருவு முழுசும் ஒரே சல சலப்பு.கீழத்தெரு, பனியில ஒறைஞ்ச தண்ணிப்போல பயத்துல ஒறைஞ்சு போயிருந்தாங்க.அந்த நேர்த்துல தா ஒரமுறை மாமா நல்லப்பன், வீரய்யா அருகில் சென்று தோள்பட்டை மீடு கை வைந்தார்.அய்யா.. அதிர்சியாயிட்டாரு.. வா நல்லப்பா என்று சொல்லி வியந்து பார்த்தார்.ரெண்டு பேருக்கும் ஏற்கனவே கல்யாணத்துக்கு பொண்ணு எடுக்குறதுல பிரச்சினை.நல்லப்பன் தங்கச்சியத்தா வீரய்யாவுக்கு கட்டுறதா இருந்துச்சு.ஆனா மனுச லவ் பண்ணிக்கிட்தரு இருந்தது யாருக்கும் தெரியல.அவரும் கடைசி வர சொல்லாம வுட்டுட்டாரு.தேதி குறிப்புடுற நாள் அன்னைக்கு தெரிஞ்சு.நல்லப்பன் மாமாவுக்கும் அய்யாவுக்கும் பெரிய சண்டைச்சு. மாமா நெறைய படிச்சிருக்குறாரு.ஊர்ல எந்த நப்ல காரியமா இருந்தாலும்,பணப்பாக்கு மாமாவுக்கு தா.

வீரய்யாவும்,மாமாவை பார்த்து என்ன மன்னிச்சுடு மாப்ளனு சொன்னார்.அதுலா ஒரு பிரச்சினையா..வுடு நானே மறந்துட்ட லனு சொன்னார் . நீ யா இங்க வந்த, உனக்கு யா தேவயில்லாத பிரச்சனை,நீ போனு அய்யா சொன்னார்.ஆனால் அதை ஏத்துக்காம...இப்ப என்ன பண்ணுலாம்னு இருக்கனு கேட்டார்.தெரியில...எவ வந்தாலு

ஒரே அடியில சாச்சிட வேண்டிதானு சொன்னார் அய்யா .ஒன்னுவேனா...எத்தனப் பேர அடிப்ப.அவுனுங்க நம்மல இது வரைக்கும், அவனுங்களுக்கு ஒழைச்சுக் கொட்டுர மாடாதா பாக்குரானுங்க.நமக்கு ஒன்னு தெரியாது நெனச்சுக்கிட்டு இருக்கானுங்க.நா சொல்றத கேளு.தெருவே கூடி வரப்போவுது கொஞ்ச நேரத்துல.சண்டப் போட்டா.. அவனுங்க நம்மகிட்ட சண்டப் போட மாட்டானுங்க.நம்ம பொருளையும், வூட்டையு தா உடைப்பானுங்க. சரி, ஒன்னுப் பன்னுவோம்.எல்லாரையும் வீட்டுக்கு போகச் சொல்லு.இத நாமளே பார்த்துக்கலாம் என்றார் நல்லப்பன் மாமா. வீரய்யாவும், எதுவும் யோசிக்காமல் வீட்டுக்கு போக சொல்லிவிட்டார்.இரு வரும் காட்டுப்பாதை வழியாவே நடந்து அரியலூரு பஸ் ஸ்டாண்டை அடைஞ்சாங்க.அங்கயிருந்து திருச்சி கலெக்டர் ஆபிஸ்க்கு போய் சேர மணி ,காலையில அஞ்சு மணி ஆயிடிச்சு.மேலத்தெரு ஆளுங்க எல்லாம் வீரய்யாவை தேட ஆரம்பிச்சுட்டாங்க.பயந்து எங்கயோ போய்டானு சொல்லிட்டு வந்த கூட்டம் பாதி புறப்பட்டது.ஒருத்தன் மட்டும், நாங்க சொல்லுறததா நீங்கயெல்லாம் கேட்டுக்கிட்டு கெடக்கனும்னு கணத்த குரலால் கத்தினான்.

விடிய ஆரம்பிச்சிடுச்சு.கலெக்டரை பாக்குறதுக்கு முன்னாடி,கடையில் பேப்பரையும் பேனாவையும் வாங்கி,எங்கள் ஊரில் உள்ள சில தேசவிரோதிகள் எங்கள் மீது தீண்டாமையை திணித்து வருகிறார்கள் .ஆகையால் எங்களை பாதுகாக்கும் பொருட்டு தீண்டாமை, வன்கொடுமை வழக்கை தொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று எழுதி தயார வச்சிருந்தார்.ஒம்போது பத்துமல மணிக்கெல்லாம் கலெக்டர் வந்துட்டாரு.வந்தவுடனே, இருவரும் விசயத்தை சொல்லி, பத்து பதினைந்து போலீசும்,ரெண்டு பெரிய வேனும் வந்தது.ஊரே மிரண்டு போனது.பலப்பேரை கைது பன்னிட்டு போனாங்க. மேலத்தெருவும் கீழத்தெருவும் வீரய்யா, நல்லப்பனுடைய செய்கையை பார்த்து உறைந்து போயிட்டாங்க.

நாட்கள் வாரத்தை கடந்துப் போச்சு...அந்த ஒரு சில வாரமும் ஒருவர ஒருவர் பாக்கும் போதெல்லாம் சண்டைக்காரனுங்கள பாக்குற மாதிரி பாத்துட்டு போனானுங்க. ஆனால் வீரய்யா,எதுவும் நடக்காததப் போல சுப்பிரமணியோட டீக்கடையை நோக்கி அதே வெறப்புடன் போனார்.

எப்போது போல சுப்ரமணி,வீரய்யாவுக்கான மரியாதை எந்த எடத்துலயும் கொறையல.அவரை பார்த்தவுடனே டீயைப் போட்டு எடுத்துகிட்டு வீரய்யாவ நோக்கி போனார்.என்ன சுப்ரமணி சொல்லாம டீ வருது,அதுவொன்னுமில்ல அய்யா..நா அப்பத்துல இருந்து ஒன்னயும் என்னயும் வேற வேறனே பாத்ததுல.நீ சொன்னனுதான எல்லா கடையிலயும் ரெணடு கெளாசுல டீ கொடுத்து...நா மட்டு ஒரே கிளாசுல டீ தர.ஒம்மேல மரியாத இல்லாமலானு பேசிக்கிட்டே..வீரய்யா அந்த பயலுவோள வுட்டுடச் சொல்லுயா..னு பேச்சு வாக்குல சொல்லுற கேட்டு சிரிப்புக்கிட்டே...மீசைய

முறுக்கி,சட்டையோட காலரத்தூக்கி போட்டு..அங்க சுத்தி இங்க சுத்தி ..ஒனக்கு என்னவோனுமோ அந்த எடத்துல வந்து நிக்குற பாத்தியானு சொல்லி..கடையில இருந்தவனுவோ யெல்லாம் வீரய்யாவையே பாத்ததானுவோ...அந்த சிரிப்புல கூட பயமே இல்ல..சரி நா யா மாப்ளகிட்ட பேசிட்டு சொல்லுரனு சொல்லிட்டு...நல்லப்பன் மாமாவை பாக்க...அவரோட வூட்டுக்கு போனார்..போனதும்...ரொம்ப வருசமா வராத காலு..வூடுத்தேடி வந்துருக்குனு சொல்லி சந்தோசத்துல மனம் நெகிழ்ந்தார்.

என்ன...வீரய்யா,ஒன்னால இந்த ஊர்ல சில நல்லது நடந்துருக்கு..அதெல்லா ஒன்னுமில்ல..நீ வந்து இந்த சட்டத்தப் பத்திலா சொல்லாம இருந்துருந்தினா ..வெறுமனே அவனுங்களோட சட்டையத்தா காலாக்காலத்துக்கு போட்டுக்கிட்டு இருந்துருப்பனு சொன்னார். சரி மாப்ள என்ன இவ்வளவு தூரம் ...அட ஒன்னுமில்ல மாப்ள..நம்ம டீக்கடை சுப்ரமணிய இருக்காால,பயலுவோ தெரியாம பேசுப்புட்டானுவோ..கேசு வாப்பஸ் வாங்கிக்க வீரய்யானு சொன்னாரு..சரி, அவ நம்ம மேல வச்சிருக்குற நம்பிக்கைக்கும் பழக்க வழக்கத்துக்கும் மனசு எறங்கி போகலாம்னு தோனுது ..அதா மாப்ள, கேட்டுட்டு போகலாம்னு வந்தனு சொன்னார்.நல்லப்பான் மாமாவும் சரி,காலக்காலத்துக்கும் இந்த ஊர்ல ஒருத்த மூஞ்ச ஒருத்த பாக்கனும்னு ..அவனுங்க செஞ்ச தப்ப நெனச்சு வருத்தப்பட்டாவது, நாம செஞ்ச காரியத்துக்கு ஒரு புரோசனம் இருக்கும்னு சொன்னார்.சரி ,வீரய்யா நாளைக்கு போய் கேச வாப்பஸ் வாங்கிட்டு வந்துடலாம்னு சொல்லிவிட்டு புறப்பட்டார்.

அந்த விசயத்த எங்கப்பா சொல்லாம இருந்துருந்த இப்படி ஒரு பெரிய மனுசன தெரிஞ்சுக்காமயே போயிருப்பனு. அடிக்கடி நெனச்சுப்பாப்ப..அதுக்கப்புறம் கீழத்தெருவுல நெறைய மாற்றம் நடந்துச்சு...எல்லா வூட்டலயும் புள்ளைங்கள படிக்க வச்சாங்க...அதுக்கு முன்னாடிலா பயத்தோடவே பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவாங்க.அந்த சம்பவத்துக்கு அப்புறம் நொறைய மாற்ற வந்தது..அப்படி ஒரு மனுச முடியாம ஆஸ்பத்திரில கெடக்காரு.ஒருத்தனுக்கு அக்கார இல்லனு நினைக்க தோனுச்சு.

நல்லப்பன் தாத்தாவும்,அவரோட கூட்டாளிங்களும் ஆஸ்பத்திரிக்கு வீரய்யா தாத்தா பாக்க போனாங்க..எனக்கும் அவர பாக்கனும்னு தோனுச்சு..நானும் அவங்களோட பஸ்ல சேர்ந்து போனோம். அவரு இருக்குற வார்டுவை கண்டுப்பிடிச்சு, ஒரு வழியா ரூமை கண்டு பிடிச்சு...அவர பாக்க போனோம்..எல்லோர விடவும் எனக்கு தா எதிர்பார்ப்பு அதிகமாயிருந்தது..நான் சின்ன வயசுல பார்த்த முதல் ஹீரோ...இப்ப எப்படி இருக்காருனு பாக்க ஆவளா இருந்த. ..கூட வந்தவங்க எல்லோரும் ஒருத்தர் ஒருத்தராக பார்த்துட்டு வந்து சோகமாக ...செவுத்துல சாஞ்சிட்டாங்க.எனக்கு ஒன்னுமே

புரியல...நான் பதட்டத்தோடவே உள்ளே போனேன்.அவர் முகம், அவருடை கம்பீரம் எல்லாமே மாறிப் போயிருந்தது. எதற்கும் கலங்காத நான்...கண்கலங்கி நின்றேன். வார்டுக்கு வந்த டாக்டருக்கிட்ட நல்லப்பன் தாத்தா ...அய்யாவோட ,நிலைமையை பற்றி கேட்டார்.டாக்டர்,அவ்வளவு தான் வாய்ப்பில்லைங்க..கொஞ்ச நேரத்துல முடிஞ்சுடும்னு சொல்லிட்டு புறப்பட்டார்.நாங்க எல்லோரும் அமைதியாக ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்து கண்கலங்கினோம்.

கொஞ்ச நேரம் கழித்து, நர்ஸ் ஓடி வந்து ..வீரய்யா கூட வந்தவங்க யாருப்பானு வேகமாக கத்தினாள்.அந்த குரலைக் கேட்டு நாங்களும் பதறி அடித்துக் கொண்டு ஓடினோம்.அவள் எங்கள் அருகில் வந்து வீரய்யா செத்துட்டாரு.பொணத்த சட்டுப்புட்டுனு எடுத்துட்டு போங்கனு சொன்னாள்.என் கண் என்னை அறியாமலே கண்ணீரை உருப் பெருக்கியது.என்னது பிணமா..அவ்வளவு பெரிய வீரனை ஒரே வார்த்தையில் பிணம்னு சொல்லி கடந்தாள்.வீரய்யாவின் உடலை வாங்கி கொண்டு ஊரை வந்தடைந்தோம்.நாங்கள் வாருவதற்குள் பந்தல், ரேடியோ,என எல்லாவித எற்பாடுகளையும் வீரய்யாவின் நண்பர்கள் செய்து வைத்திருந்தார்கள். வீரய்யாவை ஒரு மரக்கட்டிலில் கிடத்தி, ஊர் மக்கள் பார்ப்பதற்கு வைத்தோம்.நான் நினைத்த விட பெரிய கூட்டம் சேர்ந்தது. அந்த கூட்டம் அந்த மனுசனோட வீரத்துக்கும் போராட்டத்துக்கும் கிடைத்த மரியதையாக பார்த்தேன். வீரய்யாவோட பிள்ளைங்களும்,மனைவியும் தலைமாட்டில் நின்றுக் கொண்டு அழுது கொண்டிருந்தார்கள்.ஒரு புறம் நேரமாக, வீரய்யா தாத்தாவை அடக்கம் செய்வதற்கான எல்லா காரியங்களும் மறு புறத்தில் நடந்து கொண்டிருந்தது. பாடையை சாதாரணமாக கட்டாமல்,பெரிய தேர் போல் கட்டி,தாத்தாவை அதே கம்பீரமான முறுக்கு மீசையை முறுக்கி விட்டு,வெள்ளை வேட்டி,வெள்ளை சட்டை உடுத்தி உட்கார வைத்தார்கள். கூட்டம் அதிகமாகியது. தாத்தாவோடைய பங்காளி ஆட்கள் பாடையை தூக்கி கொண்டார்கள்.அமைதியாக ரோட்டை வந்தடைந்து.சுடுகாட்டை நோக்கி பயணித்தோம்.அமைதியாகவும் துக்கமாகவும் நிறைந்த கூட்டத்திலிருந்து ஒருவன்..வீரவணக்கம் ..வீரவணக்கம் என்று முழங்கினான்.கொஞ்ச நேரத்தில் மொத்த கூட்டமும் வீரவணக்கம் ...வீரவணக்கம் என்று முழங்கினார்கள்.வானத்தின் இடி சத்தத்திற்கு இணையாக ஊரின் எல்லா இடத்திலும் எதிரொலித்தது.

சுடுகாட்டை அடைந்தோம்.எல்லோரையும் போல எரிக்காமல் வீரய்யா தாத்தாவை புதைக்க முடிவு செய்தார்கள். ஒரு வழியாக அவருடைய மகன்களும் ஒப்புக் கொண்டார்கள்.எல்லோரும் சேர்ந்து வீரய்யாவை..மண்ணில் விதைத்து விட்டு,வீரவணக்கம் ..வீரவணக்கம் என்று முழக்கமிட்டு...மேலத்தெரு சுடுகாட்டை தாண்டி ..வீட்டை வந்து சேர்ந்தோம்.

●

# பாரியன்பன் கவிதைகள்

அன்றொரு நாள்
நான் நதியைக் கடந்து போது
அதில் வெள்ளம் இருந்தது.
பின்பொரு நாள்
நீ கடந்தபோது
நதியின் அடையாளமாய்
அதில் மணல் இருந்தது.
நீயும் நானும் சேர்ந்து
நதியைக் கடக்கும் நாளில்
அதில் வானுயர் கட்டிடங்கள்
நிமிர்ந்து நின்றிருந்தாலும்
நாம் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

●

இன்னும் வார்த்தைகள்
இட்டு நிரப்பப்படாத வரியில்
வந்தமர பல வரிகள்
வரிசையில் காத்திருந்தாலும்
பத்துக்கு பத்து பொருத்தமுள்ள
மிகச் சரியான வரி வேண்டும்
இக்கவிதைக்கு.

●

உனக்கு அப்படி
என்ன அவசரமோ
நான் அமர்ந்திருப்பது கூட
தெரியாமல் என்மீது
வேகமாய் ஓடிக் கடக்கிறாய்.
வலியைப் பொறுத்துக் கொள்ள
முடியாத நான்
அதை
உன்னிடத்தில் சொல்லுவதற்கு கூட
எனக்கு
அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.
என் விழிகள் கண்ணீரைக் கூட
கசிய விடக்கூடாதென்பது
எனக்குக் காலமிழைத்த
கொடுமைகள் பலவற்றில்
இது பெருங்கொடுமை.

●

எனது கனவு இல்லம்
கட்டிமுடித்து
சுற்றமும் நட்பும் புடைசூழ
மேளவாத்தியம் முழங்க
இனிதே நடந்தேறியது
புதுமனை புகுவிழா.
என்னில்
மகிழ்ச்சி வெள்ளம் கூத்தாட
சட்டென உறக்கம் கலைய
கண் விழித்துப் பார்க்கிறேன்
அதே மரத்தடி.

●

என்னை
எங்கே வைப்பதென்று தெரியவில்லை.
எல்லோரும் தனித்தனியே
அவரவர்களுக்கென்று
இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்க
எனக்கான இடம்
இதுவென்று தெரியாமல்
அல்லாடிக் கொண்டிருக்கிறேன்.
உங்களில் யாரேனும் ஒருவரிடம்
இதயத்தில் இடமிருந்தால் தாருங்கள்.
நானங்கு சற்றே
இளைப்பாறிச் செல்கிறேன். ●

# மா.காளிதாஸ் கவிதை



## அங்கே வேறு யாரோ

யாராவது கடந்து போய்க்கொண்டே
இருக்கிறார்கள். யாரோ ஒருத்தி
என்னைப் போன்ற யாரையோ
உற்று நோக்குகிறாள்.
குளிர்பதனப் பெட்டிக்குள்
எப்படியாவது நுழைந்துவிடப் பிரயத்தனப்படுகிறது
யாருடையதோ வியர்வைத்துளி.
ஆர்ஏசி இருக்கையிலிருந்து அகன்று
காலியான மேல்படுக்கையில்
கண்ணயர்ந்திருக்கும் கடவுளை
யாருமே கண்டுகொள்ளவில்லை.
புதுமனைவியை புத்துலகிற்கு
அழைத்துச் செல்லும் புதுக்கணவன்,
கழிப்பறைக்கு வெளியே
யாருடனோ தொலை உரையாடுகிறான்.
நகரும் ஜன்னலுக்கு வெளிய நீள்கிறது
யாருடைய தோளிலோ தொங்கும்
இளங்கையசைப்பு.
குறித்த நேரத்தில் இறக்கிவிடப்பட்ட
அதிவேக ரயிலின் முகப்பில் அப்பியிருக்கிறது
யாருடையதோ ரத்தச்சகதி.

# கோபி சேகுவேரா கவிதைகள்

## வாழ்ந்த வீடு

முன்வாசலில் கொட்டிக்கிடக்கும்
நெல் குவியலோடு தொடங்கும் காலை
அறை நிரம்பிக்கிடக்கும் வேர்கடலை
தாத்தாவின் விரல் பிடித்து நடந்த கிணத்துமேடு
நீண்டு மௌனித்திருக்கும் ஏரிக்காடு
திண்ணையோடு எப்போதிருக்கும் சிரிப்போசை
முன்னிரவு தென்னை கீற்றின் காற்று
பண்டம் சுடும் பாட்டியின் கைகள்
பேருந்திலிருந்து
உலகத்தையே தூக்கி வரும் மாமாவின் தோள்கள்
போதிமரத்தின் சாயல் கொண்ட மாமரமென
ஆயிரம் பக்கங்கள் கனக்கும் நினைவு
வெறும் அஃறிணை என்பது பெரும்பொய்
எல்லாவற்றையும் யோசித்துக்கொண்டிருக்கிறேன்
எப்படி வாழ்வதென்று அறிந்துகொண்ட
இந்த நிலத்தில்
முதல் சூரியன் கடலில் வீழ்ந்தபோது
நாங்கள் நிலவை பற்றியிருந்தோம்
ஒரு சடங்கு போல நிலவு வீழ்ந்தபோது
நாங்கள் வானத்தை பற்றியிருந்தோம்
ஒரு நிழலைப்போல வானம் உடைந்தபோது
எங்களுக்கென சாய்ந்தழ
சுவர்களில்லை
மரங்களில்லை
தோள்களில்லை



## புலரியின் முத்தம்

கடந்து சென்ற புலரியின் முத்தங்களில்
சிலவற்றை நான் நினைத்துக்கொள்கிறேன்
மிக சுலபமாக பற்றிக்கொள்ள முடியாத
சிலவற்றை நான் புரிந்துகொள்கிறேன்
மாசுபட்ட வார்த்தைகள்
சிதைந்துப்போன பாடல்கள்
குரலற்ற உணர்வுகள்
நிச்சியமின்மையின் விளிம்பில்
எந்த பேராவலுமில்லை
எந்த கருணையுமில்லை
வெளிபடும் எழுதிய கண்ணீரில்
ஒரு முழுமையைவிடவும் பெரிய சாயைகள்
மூலவடிவங்களின் சாயை
உன் பாதியின் பாதியாய் நம்புகிறது
தலைவிரி விகுதிகளில்
காதுக்கெட்டிய சஞ்சாரம்
உறைந்த சாயைகளோடு
கடைசிக்கணத்தில் சின்னஞ்சிறு நீயும் நானும்

## முகில் முருகேசன் கவிதை

## மானம்

அயல் நாட்டு அதிபர்
வருகையொட்டி
சாலையோரம் வீற்றிருக்கும்
நம் குடிசைவாழ்
பகுதிகளை மறைக்க
தடுப்புச்சுவர் எழுப்பியது
இந்திய அரசு
ஆம்..
மறைக்கப்படுவதில்தான்
மானம் இருக்கிறது.

# இல. பிரகாசம் கவிதை

## ஒளி

ஒளியைப் பற்றிப் புரிந்து
கொள்வதென்பது தவம்.
ஞானம். அ-ஞானத்திடம் ஒளிந்து
கொண்டிருக்கும் ஒளி

முந்நூற்று அறுபது டிகிரியிலும் ஒளி
சுழல்கிறது. சுழன்று
கொண்டேயிருக்கிறது.

குடிசையை ஆவேசமாய் உட்கொண்டு
ஜூவாலையாய் ஆங்காரமாய்
சிரிக்கின்றன.
நந்தனின் உடலில் பரவி புராணங்களாய்
கனன்று கொண்டிருக்கின்றன.

ஒளியைக் குறித்து முதலில்
எழுவதெல்லாம்
பயம் மட்டும் தான்.
இது ஒளியென அறிவதற்கு முன்பு அது
தீயென
விரலால் சுட்டுக் கொள்கிறேன்.
இருளென்ற பயத்தின் கரம்
குரலை நெறிக்கும் பொழுது
தீயென இருந்தவைகள் வெளிச்சம் தரும்
மெழுகுப் பந்தமாய் ஆயின.
வெள்ளியன்று வீட்டின் வாசல் முன்பு
எண்ணெய் ஊற்றிய விளக்கில்
இடப்பட்ட திரிகள்

தாங்கள் ஒளிர்வதாய்
முணுமுணுத்தன.
அதன் ஒளிர்தலை பண்டிகையென
பலரும் கொண்டாடினர்.
அவற்றின் மொழிகள்
புரிவதில்லை.
அல்லது புதிர்த்தன்மையில்
இருந்து அவைகள் தங்களை
விடுவித்துக் கொள்ளவில்லை.

தீ, தன்னைத் தானே தீயில்
மாய்த்துக் கொள்பவர்களை
தடுப்பது இல்லை.
பெண்கள் எனில் தீயில்
பாய்ந்தவர்களை புனிதப்படுத்த
தவறுவதில்லை.

ஒளி தன்னைத் தீயென்று
அழைப்பதை உணர்வதில்லை.
தவத்தினர் ஒளியென
அழைப்பதும்,
அ-தவத்தினர் தீயென
அழைப்பதும்
அதற்குத் 'தன்' குறித்த பிரக்ஞை
இருக்குமா?

ஜமீல் கவிதை

## மொட்டைமாடி வெளியும்
## எனது இரவுகளும்

நிதமும் பின்னிரவுகளில்
மொட்டை மாடி வெளியில்
காற்று வாக்கில் ஓய்வெடுக்கிறேன்
கீறிப் பிழந்த பூசனிப் பழம்போல்
பழுத்தொழுகும் நிலவையும்
கண் சிமிண்டும் விண் மீண்களையும்
பார்த்துப் பார்த்து  தெவிட்டி விட்டது
கூழாங் கற்களோடு ரகசியம் பேசியபடி
மீன்களின் பாடல்களை ரசித்து
சாந்தமாக நகர்ந்து செல்லும் நதியினையோ
சலசலத்தோடும் ஓடையினையோ
மொட்டை மாடிக்கு கொண்டுவர
முடியவில்லை
காற்றை மொழி பெயர்க்கும்
மூங்கில் காட்டினையோ
பனித்துளிகள் துயிலும் பசும் புல்
வெளியையோ
என்னால் கொண்டுவர முடியவில்லை
தற்கொலை புரிவதற்கஞ்சா நீர் வீழ்ச்சியையோ
கண்களைப் பறிக்கும் பபகட்டு வர்ணங்களில்
பட்டாம் பூச்சிகள் மொய்த்துப் பறக்கும்
பூந்தோட்டங்களினையோ
கொண்டுவர முடியவில்லை
ஆதலினால் இவைகளுக்கீடாக
மெய் மறக்கச் செய்யும்
பழைய பாடல்களை ரசித்துக் கேட்டபடியும்
கவிதைப் பிரதிகளை வாசித்தபடியுமாக
மொட்டைமாடி வெளியில் ஓய்வெடுக்கிறேன்
மிக இனிமையாக கரைகிறதென் இரவுகள்